Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 பிரமோதூத வூ சித்திரை மீ 05ஆம் உ புதன்கிழமை (18 - 04 - 1990) ஹிஜ்ரி 1410 றம்ழான் 21 ஓசை 59

## அனுப்பப்பட்டவர்களுக்கு பதிலாக 67 தமிழ் பொலிஸார் வந்தனர்.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து அறுபத்தேழு பொலிஸார் தென்பகுதிக்கு மாற்றப் பட்டதையடுத்து, அவர்களின் இடங்களுக்கு நாட்டின் தென்பகுதிகளிலிருந்து அறுபத்தேழு தமிழ் பொலிஸார் நேற்று மட்டக்களப்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இதற்கான உத்தரவு பொலிஸ் தலைமையலுவலகத்திலிருந்து பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு இங்கு வரும் தமிழ்ப் பொலிஸார் இன்று அல்லது நாளை மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்பார்கள்.

இவர்கள் இங்கு வந்ததும் கச்சேரி, ரயில் நிலையம் மற்றும் வீதிப்போக்கு வரத்து கடமைகளை பொறுப்பேற்றுச்செய்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழர், முஸ்லிம்களுக்கு எச்சரிக்கை அவசியம்

## நிலாவெளிக் கூட்டத்தில் மக்கள் முன்னணித் தலைவர்

(திருக்கோணமலை)

''தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தங்களுக்கிடையேயுள்ள சிறுசிறு வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக வாழ்ந்தால்தான் சகல உரிமைகளுடனும், கௌரவமாகவும், சுதந்திரமாகவும் வாழ முடியும்'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ மகேந்திரராசா (மாத்தயா) நேற்றுமாலை நிலாவெளியில் நடந்த அன்னை பூபதி நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கையிலிருந்து இந்திய இராணுவம் முற்றாக வெளியேறியபின் முதல்தடவையாக திருக்கோணமலைக்கு நேற்று வருகை தந்த திரு. மகேந்திரராசாவுக்கும் மற்றையோருக்கும் திருக்கோணமலை மக்கள் வீதிவழியேகூடிநின்று உற்சாகமான வரவேற்பளித்தனர்.

நிலாவெளியில் நேற்றுமாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆண்களும் பெண்களுமாக பெருந்திரளான மக்கள்கலந்து கொண்டனர்.

திரு. மகேந்திரராஜா தொடர்ந்து பேசுகையில் கடந்த காலப்போராட்டங்களை எடுத்து விளக்கி இப்போராட்டங்களில் முஸ்லிம் மக்கள்அளித்த ஒத்துழைப்பையும் எடுத்துக்கூறினார். தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஐக்கியமாக வாழ்வதைக்குழப்புவதற்கு சிலஉள்நாட்டுவெளி நாட்டுத் தீயசக்திகள் தீவிரமாக முனைந்துள்ளதாகவும் மக்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும்திரு. மகேந்திரராசா ...

## முல்லைத்தீவு - நெடுங்கேணி பஸ் சேவை இடைநிறுத்தம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலிருந்து நெடுங்கேணி செல்லும் பஸ் சேவை நேற்று முன்தினம் முதல் இடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ளது.

இந்தப்பாதை மிக மோசமாகி வீதி தெரியாதளவுக்கு இருப்பதால் பஸ் போக்குவரத்தை நடத்த முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். (58)

## நாட்டில் சைக்கிள்

எழுச்சி மலர் மூவர்ண படங்களுடன் அதிக பக்கங்களுடன் நாளை வெளிவருகின்றது.

## பதுளை மெயில் ரயில் நிறுத்தம்

(கொழும்பு)

கொழும்புக்கும் பதுளைக்குமான இரவுத் தபால் ரயில் நேற்றிரவு இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டிக்கும் பதுளைக்குமிடையே ரயில் தடம்புரண்டதாலேயே இவ்வாறு நிறுத் தப்பட்டுள்ளது.

எனினும் நாவலப்பிட்டி வரை சில ரயில் சேவைகள் நடைபெறும்.

## பதவி நிலை உத்தியோகத்தர்

(மட்டக்களப்பு)

வருடாந்த ஆரம்ப சம்பளம் ரூபா 36,000 அல்லது வருடாந்த சம்பள ஏற்றம் ரூபா 1200 உடைய அரச உத்தியோகத்தரொருவர் பதவி நிலை உத்தியோகத்தராக கருதப்படவேண்டும்.

மேற்கண்டவாறு திறை ...

## இறந்தவர் ஓய்வூதியம் பெற வந்தார்

(யாழ்ப்பாணம்)

இறந்து போனதாக ஓய்வூதியக் கணக்குகள் முடிக்கப்பட்ட ஒருவர் மீண்டும் யாழ். செயலக ஓய்வூதியப் பகுதியில் தனக்கு ஓய்வூதியம்தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டும் என முறையிட்ட சம்பவம் நேற்று நிகழ்ந்தது.

விவசாய திணைக்களத்தில் சாரதியாக தொழிலாற்றி வந்த எஸ். சந்தியாப்பிள்ளை என்பவர் யாழ். செயலகத்தில் ஓய்வூதிய கணக்காளரிடம் முறையிட்டதை தொடர்ந்து விசேட வவுச்சர் மூலம் அவருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகள் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதாக தான் இறந்துவிடவில்லை என முறையிட்ட சந்தியாப்பிள்ளையே இதனை ஈழநாதம் செய்தியாளருக்குத் தெரிவித்தார். (லோ)

## சுன்னாகத்தில் தபால்கட்டும் நேரங்களில் மாற்றம்

(சுன்னாகம்)

இரவுத் தபால் புகையிரத சேவைஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து சுன்னாகம்தபாற் கந்தோரில் தபால் கட்டும் நேரங்களில் மாற்றம் செய்யப் பட்டுள்ளது. சாதாரண கடிதங்கள் மாலை 6 மணிவரையும், கடுகதிக்கடிதங்கள்மாலை 5-45 மணிவரையும் மேற்படி தபாலகத்தில் ஏற்கப்படுகின்றன. தாமதக் கட்டணக் கடிதங்களைக் கட்ட மாலை 6-10

(6ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுத்தாபனத் தலைவர் பரந்தனுக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத் தொழிற்சாலைக்கு கூட்டுத்தாபனத்தின் தலைவர் உபாலி டீ. சில்வா நாளை 19ஆம் திகதி விஜயம் செய்து அங்கு நடைபெறும் திருத்த வேலைகளைக் கவனிப்பார்.

சுமார் மூன்று நாட்கள் தங்கியிருக்கும் அவர் தொழிற்சாலை திருத்த வேலைகளை நேரடியாகக் கவனித்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிற்கு ஊனமுற்றோர் நிதி ஒதுக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் ஊனமுற்றோருக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒரு வீதமான நிதி கூட இலங்கை அரசால் வடக்கு, கிழக்கில் உள்ள ஊனமுற்றோருக்காக ஒதுக்கப்படவில்லை என வட மாகாண புனர்வாழ்வு பிரிவைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஒதுக்கப்பட்ட 300 லட்சம் வழங்கப்படவில்லை

## இதைப் பெறுவதற்கு அரச அதிபர் கொழும்பு செல்கிறார்

லட்சம் அங்கீகரிக்கப்பட்டும் யாழ் மாவட்டத்திற்கு வழங் கப்படவில்லை என யாழ் அர சாங்க அதிபர் உள்ளூராட்சி ...

மாகி வீதி தெரியாதளவுக்கு னர். (58)

மா க முனைந்துள்ளதாகவும் மக்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும்திரு. மகேந்திரராசா கேட்டுக் கொண்டார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

உத்தியோகத்தராக கருதப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு திறைசேரி பணிப்பாளர் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்ற

(6ஆம் பக்கம் பார்க்க)

லட்சம் அங்கீகரிக்கப்பட்டும் யாழ் மாவட்டத்திற்கு வழங்கப்படவில்லை என யாழ் அரசாங்க அதிபர் உள்ளூராட்சி சபை அதிகாரிகளுடன் நடந்த கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாளை கொழும்பில் நடைபெற இருக்கும் அரசாங்க அதிபர்களுக்கிடையிலான மகாநாடு ஒன்றிலும் அவர் பங்குபற்றுவார் எனவும் தெரிவித்துள்ளார். (லோ)

## நாட்டில் சைக்கிள் விபத்து அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் சைக்கிள்கள் சம்பந்தமான விபத்துக்கள் தினமும் அதிகரித்து வருவதாக நேற்று கொழும்பில் நடைபெற்ற மோட்டார் போக்குவரத்து விசேட குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

நாளாந்தம் இரண்டிலிருந்து மூன்று பேர்வரை சைக்கிள் தொடர்பான வீதி விபத்தில் இறக்கின்றனர் என பொலிஸ் தரப்பில் இங்கு தெரிவிக்கப்பட்டது,

சைக்கிள் விபத்தை தடுக்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## அன்னைக்கு சாவகச்சேரியில் நினைவுச் சின்னம் திறப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரில் இன்று சாத்வீக போராட்டத்தின் தமிழீழத் தாயான அன்னை பூபதி கணபதிப்பிள்ளைக்கு ஈராண்டு பூர்த்திச் சின்னமாக ஓர் நினைவாலையம் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரியில் கேந்திரஸ்தானமான கண்டி வீதி, புகையிரத நிலைய வீதியும் சந்திக்கும் சந்தியில் இவ் புனி அன்னை நினைவாலையம் அமைந்துள்ளது. (35)

கிழக்கு பிராந்திய போக்குவரத்து சபை

## ஒப்பந்த ஊழியர்கள் வேலை நிறுத்தம்

### நிரந்தரமாக்கக் கோரிக்கை

(அக்கரைப்பற்று)

கிழக்கு பிராந்திய போக்குவரத்துச் சபை ஒப்பந்த ஊழியர் தம்மை நிரந்தரமாக்கக் கோரி சென்ற 12- ஆம் திகதியன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். கிழக்கு பிராந்திய போக்கு வரத்துச் சபையில் ஊழியர்கள் சுமார் ஆறு வருடங்களாக வேலை செய்தும், இதுகாலவரை அவர்சள் நிரந்தரமாக்கப்படவில்லையாம்.

வேலை நிரந்தரமாக்குதல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இதைப் பெறுவதற்கு அரச அதிபர் கொழும்பு செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு சென்ற வருடத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு இன்னும் வழங்கப்படாதுள்ளதால், அவற்றை இவ் வருடமாவது பெற்று புனருத்தாரண வேலைகளுக்கு பயன்படுத்துவதற்கு யாழ். அரசாங்க அதிபர் இன்று கொழும்பு பயணமாகின்றார்.

1989ஆம் ஆண்டு புனருத்தாரண நிதி சுமார் முந்நூறு

## ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

பாஷ டியன்தாழ்வு ரெட்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் நான்காவது ஆண்டு விழா இன்று நடைபெறும்.

இவ்விழாவில் மரதன் ஓட்டம், சிறுவர்களுக்கான போட்டிகளும், கலைநிகழ்ச்சிகளும்

(6ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## உதவி அரச அதிபர்பிரிவுகள் அதிகரிக்கப்படவுள்ளன.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளபத்துஉதவி அரசஅதிபர்சள் பிரிவு பதினைந்தாசு அதிகரிக்கப்படவுள்ளது,

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லை கிராமவாசிகள் நலன் கருதி பதினெட்டு கிராமசேவை அலுவலகர்கள் பிரிவு உள்ளடக்கியதாக தாந்தாமலை உதவி அரச அதிபர் பிரிவு உருவாகலாம் என தெரியவருகிறது.

மேலும் பழுாமம், கல்லாறு, ஏறாவூர் ஒட்டுமாவடி என புதிய பிரிவுகளும் சிபார்சு செய்யப் பட்டுள்ளன (37)

## தேனிசைச் செல்லப்பாவின் தேமதுர இசை நிகழ்ச்சி!

### 12 வருடங்களின் பின் யாழ். முற்றவெளி மைதானத்தில் 23இல் நடைபெறுகிறது

(நமது அலுவலக நிருபர்)

வீதிகளில் செல்லும்போது வீடுகளிலும், கடைகளிலும் ஒலிக்கும் தமிழ் உணர்ச்சிப் பாடல்களைத் தனது மதுரக் குரலால் இசைக்கும் பிரபல மேடைப் பாடகர் தேனிசை செல்லப்பா அவர்கள் இம் மாதம் இருபதாம்திகதி வெள்ளிக்கிழமை ஈழம் வருகிறார்.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளின் பின் முதல் தடவையாக யாழ். முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5மணிக்கு நடைபெறும் இன்னிசை நிகழ்ச்சியில் இவர் கலந்து சிறப்பிக்கின்றார். விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் முக்கிய தலைவர்கள் கலந்து கொள்ளும் இந்த நிகழ்ச்சியில் தமிழ்உணர்ச்சிப் பாடல்களை பாடிவரும் தேனிசை செல்லப்பாவுக்கு விசேட கௌரவம் அளிக்கப்பட இருக்கிறது. அன்றைய தினம் குடாநாட்டின் பல பாகங்களுக்கும் விசேட பஸ்சேவை வசதிகள் செய்யப் பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியைத் தொடர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களுக்கான கடன் முற்பணம் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் கடன் உதவிகள் சம்பள முற்பணம் என்பன இவ்வாண்டு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபரும் ஒன்றை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சின செயலாளர் திரு. என். எம். பெர்னான்டோ சகல திணைக்களங்களின் தலைவர்களும் அனுப்பிவைத்துள்ளார்.

இதன்படி நாற்பதாயிரம் ரூபா அறுபதினாயிரம் ரூபாவாகவும், பதினையாயிரம் ரூபா இருபத்திரண்டாயிரத்து ஐநூறு ரூபாவாகவும், ஐயாயிரம் ரூபா ஏழாயிரத்து ஐநூறு ரூபாவாகவும் ஆயிரத்துஇருநூற்றிஐம்பது ரூபா இரண்டாயிரம் ரூபாவாகவும், ஆயிரம் ரூபா ஆயிரத்து ஐநூறு ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (37)

மட்டக்களப்பு

## ஆசனப்பதிவு டிப்போவில் மக்கள் அவதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு யாழ்ப்பாணம் பஸ் பயணத்திற்கான ஆசனப் பதிவுகள் மட்டக்களப்பு டிப்போவில் நடைபெறுவதால் பொதுமக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

பொத்துவில், கல்முனை, களுவாஞ்சிச்குடி போன்ற இடங்களிலிருந்து வருபவர்கள் மட்டக்களப்பு பஸ் நிலையத்திலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள டிப்போவுக்கு வேறு பஸ்களில் செல்ல வேண்டியுள்ளது.

இதனால்முன்னரைப்போல மட்டக்களப்பு பஸ்நிலையத்திலேயே இந்த ஆசனப்பதிவுகளை நடாத்தவேண்டுமென மட்டக்களப்பு யாழ்ப்பாணப் பயணிகள் அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

யாழ். புகையிரதத்திற்கு

## ஆசனம் பதிவு செய்வதில் மக்கள் சிரமம்

(கொழும்பு)

கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரும் புகையிரதங்களுக்கு ஆசனம் பதிவு செய்வதில் பொதுமக்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நேரத்துடன் உறங்கலிருக்கை ஆசனத்திற்குப் பதிவு செய்யும் இடத்திற்குப் போனால் முடிந்துவிட்டதாகவும் பதில் கூறப்படுகிறது.

ஆனால் தரகர்கள் மூலம் நூறு ரூபாவுக்கு எவ்வளவு உறங்கலிருக்கை ஆசனப்பதிவு

(6ஆம் பக்கம் பார்க்க)

போட்டோப் பிரதி

## இயந்திரம் பழுதால் விண்ணப்பங்கள் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திர செயலக காரியாலயத்தில் போட்டோ பிரதி செய்யும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் தேங்கிக் கிடப்பதாக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

பிறப்பு இறப்புக்கான விண்ணப்பங்கள விண்ணப்பிக்கப்படும்போது அவை மூலப்பிரதியுடன் ஒப்பிடப்பட்டு மூலப் பிரதி 'போட்டோஸ்டட்' செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும். இது வேலையை சுலபமாகவும்

(6ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

சீயாக்காய், பயறு, அரிசி, வெந்தயம் ஆகிய நான்கு வகைப் பொருட்கள் அடங்கிய சீயாக்காய் பவுடர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

M. G. M. NO. 777
K. K. S. ROAD, JAFFNA.
(B/746)

சேவை

எவ்வகையான மோட்டார் சைக்கிளாயினும் துரித கெதியில் திருத்திக் கொடுக்கப்படும். Motor Cycle Repair Centre No. 3, Eachchamoddai Road Jaffna. உரிமையாளர்: S, மகேந்திரராஜா (B.758)

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஒடியோ றெக்கோடிங்கிற்கும், ரி. வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: NEW VENUS No: 60 Stanley Road, Jaffna.
B/538

தேவை

5 வருடத்துக்கு மேல் அனுபவமுள்ள பெற்றோல்/ டீசல் மெக்கானிக் தேவை. நேரில் வரவும் அல்லது விண்ணப்பிக்கவும். ஸ்ரான்லி மோட்டர்ஸ் 52, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (R/196)


## மக்கள்வங்கி அதிகாரிகள் புங்குடுதீவு மக்கள் சந்திப்பு

(புங்குடுதீவு)

வளமான வாழ்வை நோக்கி மக்கள் வங்கி முகாமையாளர் வாடிக்கையாளர் சந்திக்கும் நிகழ்ச்சி ஒன்று இன்று புதன் கிழமை காலை 9.30 மணியளவில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில், புங்குடுதீவு நயினாதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு.ப. கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பு நிகழ்ச்சியில் வடபிரதேச மக்கள் வங்கி முகாமையாளர் திரு.ஆர்.அருளானந்தம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

புங்குடுதீவு நயினாதீவு, நெடுந்தீவு பகுதிகளில் வாழும் மக்கள் வங்கி வாடிக்கையாளர்களின் தேவைகள், மக்கள் வங்கி வழங்கும் கடனுதவிகள் இளைஞர்களின் தொழில் வாய்ப்புக்கான கடன் உதவிகள் சேமிப்பு விடயங்கள்,மீண்டும் புங்குடுதீவில் மக்கள் வங்கிக்கிளையைத் திறத்தல் போன்ற விடயங்கள் பற்றி இச்சந்திப்பின் போது ஆராயப் படவுள்ளது. (22)

## சுவாமி பிரேமாத்மானந்தஜிக்கு மட்டுநகரில் அஞ்சலிக் கூட்டம்

(மட்டக்களப்பு)

காலஞ்சென்ற சுவாமி பிரேமாத்மானந்தஜீ இராம கிருஷ்ண மிஷன் தலைவராக மட்டுமன்றி இலங்கையில் இந்து மதத்தின் தலைவராகவும், முடி சூடா மன்னனாகவும் விளங்கினார்.

மேற்கண்டவாறு காலஞ்சென்ற சுவாமி பிரேமாத்மானந்தஜீயின் மறைவு முன்னிட்டு மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்த அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் குறிப்பிட்டார்..

மன்றத் தலைவர் ரு. எம் சிவநேசராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் திருக்குறளில் வள்ளுவர் கூறும் அறத்திற்கு இலக்கணமாக வாழ்ந்தார். மனதில் மாசு இல்லாமல் வாழ்வதுதான் உண்மையான அறம் என வள்ளுவர் கூறியுள்ளார். அதனை சுவாமி தமது வாழ்க்கையில் காட்டியுள்ளார்.

சுவாமி நேர்மைத்திறன், நெஞ்சுபலம், ஆன்மிகபலம் ஆகியவற்றுடன் வாழ்ந்தார் என்றார். (37)

## தேய்வான தராசுகள் புழக்கத்தில்

(ஈச்சமோட்டை)

திருநெல்வேலி சந்தையில் உள்ள வியாபாரிகளில் சிலர் முத்திரையிடப்படாத தேய்வான தராசுகளையும் படிகளையும் பாவிப்பதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

ஒரு கிலோ பொருளை வாங்கி நிறுத்த போது நூற்றி ஐம்பது கிராம் வரை குறைவாக காணப்பட்டதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (43)


யாழ்நகரில் இன்றைய சினிமா

வின்ஸர்-யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

111வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)


## மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்களுக்கு நோய் குறைகிறது

(மட்டக்கனப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாவியிலும், குளங்களிலும் மீன் இனங்களுக்கு ஏற்பட்ட நோய்த்தாக்கம் குறைந்துள்ளதால் மீன் சாப்பிடலாம் என கடற்றொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

நீர் விலங்கியல் ஆய்வு உத்தியோகத்தர்களின் அறிக்கையின் பிரகாரம் நோய் உள்ள மீன் தவிர ஏனைய மீன்கள் சாப்பிடலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

கடல் மீன்களில் எவ்விதமான நோய்த் தாக்கங்களும் இல்லை என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் இங்குள்ள வாவிகளில் நோயினால் பீடிக்கப்பட்டு மீன்கள் இறந்து மிதந்ததால் மீன் சாப்பிட தடைவிதிக்கப்பட்டிருந்தது.

## புங்குடுதீவில் கசிப்பு பாவனை மீண்டும் அதிகரித்துள்ளது

(புங்குடுதீவு)

புங்குடுதீவின் பல பகுதிகளில் மீண்டும் கசிப்புத் தொல்லை தலை தூக்கியுள்ளது. கசிப்பு உற்பத்தியும் பாவனையும் ஆங்காங்கே மறைமுகமாக நடைபெற்று வருவதாக இப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கசிப்பை பாவிக்கும் குடிகாரர்கள் மது போதையில் நின்று பாடசாலைகள், சந்தைகள் போன்ற மக்கள் கூடும் இடங்களில் நின்று ஆபாசமான வார்த்தைகளால் பேசிபொதுமக்களுக்கு பலவித தொல்லைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

சட்ட விரோதமாக கள், சாராயம், கசிப்பு என்பவற்றை விற்கக் கூடாதென கடந்த வாரமும் தெங்குபனம் பொருள் அபிவிருத்தி சபையினரால் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.குறிப்பிடத்தக்கது.

ஆனால் இவற்றைப் பொருட்படுத்தாமல் மீண்டும் இவை இங்கு நடைபெறுகின்றது.

## பட்டப் பின்படிப்புகள் பதிவுகள்

(கொழும்புத்துறை)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப் பின்படிப்பு முதலாம் ஆண்டுக்கானபதிவுகள் அடுத்த மாதம் 11-ம் திகதி இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது (24)

## நயினாதீவு படகுச் சேவை

(புங்குடுதீவு)

குறிக்கட்டுவான் நயினாதீவு படகுசேவை பின்வரும் நேரக்கிரமப்படி தற்போது நடைபெறுகிறது.

குறிக்கட்டுவான் துறையிலிருந்து சுாலை 9. 00 மணி 10. 00 மணி 11 மணி நண்பகல் 12. 30 மணி பி.ப 2.00 மணி 3. 30 மணி மாலை 5. 30 மணி ஆகிய நேரங்களில் நயினாதீவுக்கு சேவை நடைபெறுகிறது.

நயினாதீவு அம்பாள் கோவிலடியிலிருந்தும்வங்களாவடி துறையிலிருந்தும் காலை 7. 00 மணி 8. 00 மணி 9.00 மணி 10. 00 மணி நண்பகல் 11. 30 மணி பி. ப 2. 00மணி 3. 30 மணி ஆகிய நேரங்களில் குறிக்கட்டுவானுக்கும் மேற்படி படகுசேவை நடைபெற்று வருகின்றது. (22)

## வாகனங்களுக்கு புதிய இலக்கத்தகடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மோட்டார் சைக்கிள் உட்பட சகல வாகனங்களிலும் புதிய இலக்கத் தகடுகள் காணப்படுகின்றன.

புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட இலக்கத் தகடுகளுடன் வாகனங்கள் காட்சி தருகின்றன. (37)

## எழுதுவினைஞர் சங்க பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 29ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் வைகாசி மாதம் 21ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது. (24)

## வர்த்தக அமைச்சு புதிய கொள்கை

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பால் அவற்றின் இறக்குமதி தொடர்பாக புதிய கொள்கை ஒன்றை வர்த்தக அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் கடைப்பிடிக்கவுள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதிச் செலவினங்களைக் குறைப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.


அன்னை பூபதியே தங்கள் புகழ்

தமிழீழ விடுதலைப் போரில்

பரணி பாடுதற்குரியது



அன்னை பூபதியே

தங்கள் தியாகம் காலத்தால் அழியாதது!




## மதுபோதையில் காணப்படும் அரசஊழியர் மீது நடவடிக்கை

பொதுநிர்வாகஅமைச்சர்சுற்றறிக்கை

## பொலிஸ் அறிக்கை

புதுவருடத்தன்று வடக்கு கிழக்கு உட்பட தெற்கில் பாரதூரமானசம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என

அரசாங்க ஊழியர்கள் கடமை நேரத்தின் போது மதுபோதையில் இருந்தால் அல்லது அவர் பணிபுரியும் அலுவலகத்தின் சுற்றாடல் மது போதையில் காணப்பட்டால் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கூறும் சுற்று நிருபத்தை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் சகல அமைச்சுக்களின் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்களுக்கும் கூட்டுத்தாபன தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இதே போலவே போதை வஸ்து பாவித்தாலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)


சனசமூக நிலையங்களின்

ஒன்றியம்

ஊர்காவற்றுறை,

R.197



கொழும்பு குறோசறி

பிரதான வீதி,

ஊர்காவற்றுறை.

(R.198) 0


இடம் பெறவில்லை என பொலிஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.


வியாபாரம்பெருக

விளம்பரம் செய்க


## அன்னை பூபதிக்கு அஞ்சலி!



தீ கனன்றது
தீமை பொசுங்கிட
தீயோர் நெஞ்சம்
தீயாய் எரிந்திட

தாய் இருந்ததோ
யாக பூமியின்
தியாக வேள்வியில்
ஆகுதி ஆகிட....

ஓ... அதிசயம்
நடந்து முடிந்தது
உன்னத காவியம்
மண்ணை நிறைத்தது

அன்னை துயின்றனள்
அன்னை துயின்றனள்
மண் விழித்தது
மானுடம் சிலிர்த்தது

வீதிகள் தோறும்
அஞ்சலி ராகம்
புதுயுக விடியலின்
பூபாளராகம்...

பூபதி பூக்கள்....
புதிதாய்ப் பூக்கும்
ஆகுதி ஆனவள்
அடியினைத் தொடரும்...


NEW MASTER

INSTITUTE

B. M. C. LANE. JAFFNA.

(B-781)

# புதுடில்லியில் இரு இடங்களில் பெருந் தீ!

## 200 கடைகள் நாசம்; 45 தீயணைப்பு வண்டிகள் முயற்சி

(டில்லி)

புதுடில்லியில் உள்ள வித்யா பவனில் திங்கள் அன்று நடைபெற்ற தீ விபத்து அணைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அதே வேளை டில்லியின் சகர்பதாஸ் பகுதியில் மற்றொரு தீ மூண்டது:

இத் தீ விபத்து நெருங்கிய வர்த்தகப் பகுதியில் இடம் பெற்றது சுமார் 200கடைகள் தீக்குஇரையாகினஎன்றுகூறப் படுகிறது. 45 தீயணைப்பு வண்டிகளின் உதவியுடன் அத் தீ செவ்வாய் அதிகாலை கட்டுப்படுத்தப்பட்டது.

வித்யா பவனில் பொலிஸ் அதிகாரிகளின் மகா நாடு நடை பெற்றுக்கொண்டிருந்த அறையின் ஒரு மூலையில் தீப் பொறி முதலில் காணப் பட்டது. அது பின்னர் அதிகரித்து அக் கட்டிடத்தின் வேறு பகுதிகளுக்கு பரவியது .இவ்விபத்து நடை பெற்ற வேளையில் மாநில செய்தித்துறை செயலாளர்கள் மற்றும் இயக்குனர்களின் மகாநாடும் இன்னொரு அறையில் நடைபெற்றது.

தீயினால் ஏற்பட்ட உயிர் இழப்புக்கள், சேத விபரங்கள் பற்றி இதுவரைஒன்றும் வெளியிடப்படவில்லை. அதே நேரம் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணமும் கண்டு பிடிக்கப் படவில்லை.

# நேபாளத்தின் புதிய பிரதமராக கணேஷ் மான்சிங் நியமனம்

(காட்மண்டு)

நேபாள மன்னர் பிரேந்திரா தன்னை இடைக்கால அரசு ஒன்றை அமைக்கும்படி கேட்டிருப்பதாக முக்கிய எதிர்க் கட்சித் தலைவர் கணேஷ் மான்சிங் அறிவித்திருக்கிறார்.

அரசியல் சாசன மாற்றங்கள் கொண்டுவரும்படி கடந்த ஆறுமாத காலமாக கொடுக்கப்பட்ட நெருக்கடியைக் குறைக்கும் முகமாக மன்னர் பிரேந்திரா நாட்டில் கட்சி சார்பற்ற அரசைக் கலைக்க இணங்கியுள்ளார் என்றும் அவர் கூறினார்.

இதற்கு முன்னதாக கடந்த திங்கள் அதிகாலைவரை நடந்த பேச்சுவார்த்தைகள் இடையிலே முறிந்தமை தெரிந்ததே. எதிர்க்கட்சிகளால் வைக்கப்பட்ட எட்டுக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படாததாலேயே எதிர்க் கட்சியினர் பேச்சுவார்த்தை நடைபெற்ற இடத்திலிருந்து வெளியேறினர்.

இதற்கிடையில் செவ்வாய்க் கிழமை மன்னர் பிரேந்திரா வானொலி மூலம் மக்களிடையே உரையாற்றுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார். 'அண்மைக் காலமாக நாட்டில் கிளர்ந்த அரசியல் நெருக்கடியைக் கருத்தில் கொண்டு ஜனநாயக வளர்ச்சிக்கான புதிய மாற்றங்களைத் தான் கொண்டு வந்ததாகக் கூறினார்.

இடைக்கால அரசை நிறுவும்படி கேட்ட கணேஷ் மான் சிங் இவ்அரசின் அமைப்புப் பற்றி நேபாள காங்கிரஸ்கட்சி உறுப்பினர்களுடனும், ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனும் கலந்து ஆலோசித்து வருகிறார்.

அதேவேளை மன்னர் பிரேந்திரா தேசிய பஞ்சாயத்தையும். பஞ்சாயத்து பேரவையையும் கலைத்து விட்டதாக அறிவித்திருக்கிறார். நேபாள பிரதம மந்திரி லோகேந்திர பகதூர் பந்த் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

எனினும் புதிய ஏற்பாடுகள் செய்யும் வரை அதாவது இடைக்கால அரசு நிறுவும் வரை அவர் பதவியில் இருப்பார் என அரசு தெரிவித்திருக்கிறது.

# உணவில் நஞ்சு 37பேர் பலி! ரயில் விபத்தில் 100பேர் மரணம்

(பட்னா)

பீகார் மாநிலத்தின் தலைநகரான பட்னாவில் ரெயிலில் ஏற்பட்ட தீவிபத்தில் நூறு பயணிகள் உயிர் இழந்தனர். மேலும் பலர் காயமடைந்ததாக கூறப் படுகின்றது.

பயணி ஒருவர் எடுத்துச் சென்ற காஸ் சிலிண்டர் வெடித்த போது இந்த தீவிபத்து ஏற்பட்டு இரண்டு ரயில் பெட்டிகள் தீப்பற்றி எரிந்ததாக தீயணைக்கும் படையினர் தெரிவித்தனர்.

இதற்கிடையில் இந்தியாவின் மற்றொரு மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் கிறைக் சாடா கிராமத்தில் நஞ்சு கலந்த உணவு அருந்தியதில் 37 பேர் உயிர் இழந்துள்ளார்கள். 130 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் கிராமத்தில் நடைபெற்ற திருமண வைபவத்தில் நடந்த விருந்தொன்றில் கலந்து கொண்ட விருந்தாளிகள் என தெரிகிறது.

# இந்தியா பாக் மோதல் தடுக்க முயற்சி

(வாஷிங்டன்)

இந்தியாவிற்கும், பாக்கிஸ்தானுக்கும் இடையே போர் நடைபெறா வண்ணம் தடுப்பதற்கான முயற்சியில் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் ஈடுபட்டுள்ளன.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் முஸ்லீம் தீவிரவாதிகளின் பிரச்சாரத்தின் விளைவாக இரு நாடுகளுக்கும் இடையே போர் ஏற்படக் கூடிய நிலைமை வருகிறது.

போர் ஏற்படும் அபாயத்தை நிறுத்தி நிலைமையை தணிப்பதற்கு பேச்சு வார்த்தைகளை நடத்தும் படி இந்தியாவிற்கும் பாக்கிஸ்தானிற்கும் அமெரிக்கா வேண்டுகோள் விடுத்திருப்பதை டில்லியில் உள்ள அமெரிக்க தூதுவர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

# பெனாசிர் புனித யாத்திரை யுத்தம் மூளாது என நம்பிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான்பிரதமர் பெனாசீர் பூட்டோ புனிதயாத்திரை ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் மக்கா சென்றுள்ளார். காஷ்மீர் தொடர்பான இந்தியா பாகிஸ்தான் இடையிலான வாய்ச் சண்டை யுத்த களம் வரை போய்விட்டதென்றாலும், அது புதிய பரிமாணங்களை எடுக்காது என்று பூட்டோ கருதுவதால்தான் அவர் புனித யாத்திரையை மேற்கொண்டுள்ளார் என ராஜதந்திரிகள் கருதுகின்றனர்.

பாகிஸ்தான் எல்லையில் கவச வாகனங்கள், துருப்புக்கள் நடமாடுவதாக இந்தியப் பிரதமர் வி.பி.சிங் சென்ற சனியன்று தெரிவித்தகருத்தை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

சவுதி அரேபியாவிலிருக்கும் புனித ஸ்தலங்களான மக்காவுக்கும், மதினாவுக்கும் செல்லும் பூட்டோ, சவூதி அரேபிய மன்னருடன் பேச்சு வார்த்தை நடத்துவாரா என்பது பற்றுச் செய்தி அச்சுக்குப் போகும் வரை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

1989 ஜனவரியில் பெனாசீர் பூட்டோ மக்காவுக்குப் புனித யாத்திரையை மேற்கொண்டிருந்த சமயம் சவுதி அரேபிய மன்னரான பகத்துடன் பேச்சு வார்த்தைநடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த்தின விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்விக் கோட்டத் தமிழ்த்தினவிழாப் போட்டிகளின் திறந்த நிகழ்ச்சியில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மாணவர்களால் நடிக்கப்பட்ட காத்தவராயன் நாடகம் முதலாம் இடத்தைத் தட்டி பலரது பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டது.

வில்லுப்பாட்டில் வட-இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர் (25)

## உள்ளூராட்சி திணைக்களம் நூலகங்களுக்கு கருத்தரங்கு

(பருத்தித்துறை)

அயோத்தி நூலக சேவை தமிழ் பிரதேச நூலகங்களின் துறைசார் அறிவினை மேம்படுத்து முகமாக நூலகங்களுக்கான ஒன்று கூடல்களை நடாத்தி வருகின்றது. இந் நூலகங்களுக்கான ஒன்று கூடல் உள்ளூராட்சித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படுகின்றது.

இந்நடவடிக்கைகளின் அடிப்படையில் எதிர் வரும் 27ஆம் திகதி எவிலியன் இரத்தினம் பண்பாட்டியல் நிறுவனத்தில் நூலகர்களுக்

இக்கலந்துரையாடல்கள் மூலம் பிரதேச நூலகர்களின் துறைசார் அறிவினை விருத்தி செய்யவும், நூலகர்கள் பல்வேறு நிறுவனங்களின் நூலகர்களுடனும் பரிச்சயமாகி துறைசார் நடவடிக்கைகளை மேம்படுத்தவும் வழிவகுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (25)

## குருபூசை

(பருத்தித்துறை)

இலங்கை சைவ மன்ற புலோலி கிழக்கு கிளை இம் மாதம் 21 ஆம் திகதி சமய குரவர் திருநாவுக்கரசு நாயனார் (அப்பர்சுவாமிகள்)

# பல்துறை ஆட்டக்காரராக வளர்ந்து வரும் வாசிம் அக்ரம்

''அந்த இளைஞர் என் அணிக்குத்தேவை என்று கூறிய போது, மிகவும் இளையவராக இருக்கிறாரே என்று தெரிவாளர்கள் தயங்கினார்கள். இருந்தும் நான் வற்புறுத்தியதன் பேரில் அவர் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார் நியூசிலந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் தலா ஒவ்வொரு இனிங்ஸிலும் ஐவைந்து விக்கெட்டுக்களை அவர் பெற்றுக் கொண்டார்'' இவ்வாறு ஜாவிட் மியான் டாட். வாசிம் அக்ரத்தைப்

அநேகமாக வேகப் பந்து வீச்சாளர்கள் நீண்ட தூரம் ஓடி தம் பந்து வீச்சு வேகத்தைப் பிறப்பிக்கும் வேளையில் வாசிம் அக்ரத்தின் பாணி தனித்துவமானது.

அவுஸ்திரேலிய முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் அனைவருக்குமே வாசிம் அக்ரம் பெரும்தொல்லை கொடுப்பவராகவே இம்முறை இருந்திருக்கிறார். இதனை டீன் ஜோன்ஸ், மார்க்டெய்லர், டேவிட்பூன் ஆகியோர் ஒப்புக் கொண்டு பாராட்டியுள்ளனர்.

வென்று இலங்கை விக்கெட்டுக்களைச் சாய்த்து வெற்றியை பாகிஸ்கான் பக்கம் திருப்பியவர் இவரே.

இதேபோல இதே தொடரின் இறுதி ஆட்டத்தில் இறுதிப் பந்தில் வெற்றிக்கு நான்கு ரண்கள் எடுக்கவேண்டிய நிலையில் வாசிம் அக்ரம் அப்பந்தை பாரியதொரு சிக்சராக்கி பாகிஸ்தானை சாம்பியன் ஆக்கினார். வாசிம் அக்ரத்தின் அந்த அதிரடி பலம் மிகுந்த மேற்கிந்திய அணியை முன் கவ்வச்

# முறைசாராக் கல்வியினால் மாணவர்களுக்கு பயன் உண்டு

(யாழ்ப்பாணம்)

மாணவருடைய முழு நோக்கமும் பல்கலைக்கழகத்தை மட்டும் நம்பி இராது தொழில்நுட்ப கல்விகளையும் ஆரம்ப முதலே கற்கத் தொடங்கினால் அவன் பாடசாலை இறுதிக் கட்டத்தை அடையும்பொழுது ஒரு சுய தொழில் ஆரம்பிக்கக் கூடிய திறமையும் ஆற்றலும் நல்ல மனப்பாங்கும் தோன்றும்.

இவ்வாறு யாழ் மத்திய கல்லூரியின் அதிபர் தலைமையில் முறைசாராக் கல்வியின் குளிர்சாதனப் பயிற்சியை ஆரம்பித்து பேசிய கல்வித் திணைக்கள முறைசாராக்

கௌரவ பிரச்சினைகள் காரணமாக வீட்டிற்குள்ளேயே அடைபட்டு இருக்கிறார்கள். இப்படியான நிலையை மாணவர்களாகிய நீங்கள் மற்ற இளைஞர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக முன்வர வேண்டும் என்றார். இத்திட்டத்திற்கு உதவிய ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான தூதரக அதிகாரிகளுக்கும் நன்றி கூறினார்.

இப்பயிற்சியை கற்பிக்கும் ஆசிரியர் திரு. சிறிஸ்கந்தராஜா அங்கு பேசுகையில் கல்வித்திணைக்கள முறைசாராக் கல்வி தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு. சுப்

நிறுவனத்தில் நூலகர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெறுகின்றது.

இக்கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்றங்களின் நூலகர்களைக் கலந்து கொள்ளுமாறும், இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளும் நூலகர்களுக்குக் கடமை விடுமுறை வழங்கப்படுமென்றும் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால அறிவித்துள்ளார்.

னார் (அப்பர்சுவாமிகள்) குருபூசையைச் சிறப்பாக நடாததவுள்ளது.

பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலயத்தில் (சிவன்கோயில்) அப்பர் சுவாமிகளுக்கு ஸ்நபனாபிஷேகத்துடன் நைவேத்திய தீபாராதனைகளும் விசேட பூசைகளும் நடாத்தப்படும்அப்பர்தேவார படனமும் இடம்பெறும் எனவும் இலங்கைச் சைவமன்றம் அறிவித்துள்ளது. (25)

# அழிக்க முடியாததால்தான் பேச்சுக்கு அழைத்தார்கள்

- மூர்த்தி

(தீவுப்பகுதி)

இதுவரை ஆயுத மேந்திப் போராடிய நாம் இன்று ஜனநாயக ரீதியில் செயல்பட ஆரம்பித்துள்ளோம். ஆயுத மேந்தி சுதந்திரத்திற்காக போராடிய இயக்கமொன்று அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். இலங்கை அரசு விடுதலைப் புலிகளை அழிக்க முடியாத காரணத்தினால் தான் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எம்மை அழைத்தது.

எமது ஆயுதப் போராட்டத்தின் வெற்றிதான் நமது மக்கள் முன்னணியாகும். மக்கள் அணிதிரண்டு எமது மக்கள் முன்னணியில் சேர்ந்து கொள்ளுதல் வேண்டும். அப்போதுதான் இறந்த போராளிகளின் இலட்சியம் நிறைவேறும். மக்கள் முன்னணி தேர்தலுக்காக அமைக்கப்பட்ட கட்சியல்ல, அது தமிழ் மக்களின் உயிர் நாடியான கட்சி.

இவ்வாறு தமிழ் ஈழவிடுதலைப்புலிகளின் அரசியல் முக்கியஸ்தர் திரு. மூர்த்தி தெரித்தார்.

தீவுப்பகுதியில் அமைக்கப்பட்ட சிற்றூரவையின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கூட்டம் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலய அசெம்பிளி மண்டபத்தில் நடைபெற்ற போதே மக்கள் முன்னணியின் அரசியல் முக்கியஸ்தர் திரு. மூர்த்தி மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார். இக்கூட்டத்தில் ஐநூற்றுக்கு மேற்பட்ட சிற்றூரவைநிர்வாகிகள் தீவுப்பகுதியின் பலபாகங்களிலுமிருந்து கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக், யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. ராஜன், மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி. சோபிகா, தீவுபகுதி அரசியல் முக்கியஸ்தர் திரு. நரேஸ், தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. வி. கஸ்ரோ ஆகியோர் உரையாற்றினர். தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதிப் பொறுப்பாளர் திரு. ஜேப்ஸ் அவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (15)

இவ்வாறு ஜாவெட் மியாண்டாட், வாசிம் அக்ரத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். இது நடைபெற்றது 1985இல். இன்று வசிம் அக்ரம் எனும் பெயரை அறியாத கிரிக்கெட் ரசிகர்கள் இருக்க முடியாது. வாசிம் அக்ரம் மிகச் சிறிய வயதிலேயே ஒரு சிறந்தவேகப் பந்து வீச்சாளராக தன்னை இனம் காட்டிக் கொண்டவர். 1984 இல் 17 வயதில் நியூசிலந்துக்கு எதிரான முதல தர மாட்ச் ஒன்றில் 7 விக்கெட்டுகளை 50 ரண்கள் மட்டும் கொடுத்து வாசிம் கைப்பற்றிக் கொண்டார். வாசிமைப் பொறுத்தவரையில் சிறப்பென்னவெனில் பாகிஸ்தான் முதல் தர கிரிக்கெட் ஆட்டங்களில் பங்கு கொள்ளாமலேயே நேரடியாகத் தேசிய அணியில் இடம் பெற்றமையாகும். இவரின் அபாரமான பந்துவீச்சு 20 வயதிலேயே லங்காவுயா கவுண்டி அணியில் இவரை ஒரு அங்கத்தவராக்கியது. இங்கிலாந்துக் கவுண்டிகள் மிகச் சிறந்த ஆட்டக்காரர்களை மட்டுமே தம் அணிக்காக ஒப்பந்தம் செய்வது யாவரும் அறிந்ததே.

### தலை சிறந்த ஆட்டக்காரர்

இன்று, 1990 இல் அவுஸ்திரேலியா பாகிஸ்தான் டெஸ்ட் ஒருநாள் தொடர்களின் மிகச் சிறந்த ஆட்டக்காரராக வாசிம் அக்ரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்ல் இம்ரன்கான், மார்க் டெயிலர், டீன் ஜோன்ஸ் அலன் போர்டல் எல்லோரையும் மேவி இவர் இப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டதுதான். வாசிம் அக்ரம் மிகக்குறுகிய தொலைவில் இருந்தே பந்துவீச்சை ஆரம்பித்து மிக வேகமாகப் பந்து வீசுபவர் ஆவார். இது ஒரு சிறப்பாகும். இந்த வகையில் இன்னொருவரைக் குறிப்பிடுவதாயின் மல்கம் மார்சலை மட்டுமே குறிப்பிடமுடியும்.

டெஸ்ட்டிலும் ஆகியோர் ஒப்புக்கொண்டு பாராட்டியுள்ளனர். மேலும் வாசிம் அக்ரம் பூரண தேகசுகத்துடன் இத்தொடரில் பங்கு கொள்ளவில்லை. வாசிம் அக்ரம் இன்றி அணி இல்லை என்ற நிலையில் காயங்கள் சுகமடையாத நிலையிலும் பல மாட்ச்களில் ஆடியது குறிப்பிடத்தக்கது

### பல்துறை ஆட்டக்காரர்

வாசிம் அக்ரம் பந்து வீச்சில் மட்டுமன்றி துடுப்பெடுத்தாடுவதிலும் வல்லவராகிக் கொண்டு வருகின்றார். இதற்கு உதாரணம் அண்மையில் முடிவடைந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அடிலெய்ட் டெஸ்ட் ஆகும். இந்த டெஸ்டில் அபாரமாக ஆடி சென்சுரி போட்டது அனைவராலும் வியந்து பாராட்டப்பட்டது. பின்னர் ஆடப்பட்ட ஒருநாள் போட்டியொன்றில் மிக அபாரமாக ஆடி அணியின் மொத்த ஓட்டங்களான 162 ஓட்டங்களில் 86 ஓட்டங்களை வாசிம் அக்ரம் பெற்றுக்கொண்டார். இதில் 3 சிக்சர்களும் 5 பவுண்டரிகளும் அடக்கம். இவ்வகையில் பார்க்கும்போது வாசிம் அக்ரம் இன்று ஒரு பல்துறை சிறப்பாட்டக்காரராக உருவாகி வருகிறார் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் கருதுகிறார்கள்

அணியின் ஓட்டங்களை வேகமாக அதிகரிக்க வேண்டிய வேளைகளில், அல்லது ஒரு இக்கட்டில் இருந்து மீள வேண்டிய நிலையில் அல்லது எதிரணியினைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலையில் அணித் தலைவருக்கு என்றும் கை கொடுப்பவராக வாசிம் அக்ரமே இருந்து வருகின்றார்.

ஜவஹர்லால் நேரு ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களின்போது வாசிம் அக்ரம் தன் திறமையை சிறப்பாக எடுத்துக்காட்டினார். இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் தோல்வியைத் தழுவக்கூடும் என்ற நிலையில் இறுதி நேரத்தில் சட சட

ரடி பலம் மிகுந்த மேற்கிந்திய அணியை மண் கவ்வச் செய்தது. இப்படியாக வாசிம் அக்ரம் தன் திறமையைக் காட்டிய சந்தர்ப்பங்கள் பற்பல. வாசிம் துடுப்பெடுத்தாட வருகிறார் என்றால் மைதான வியூகம் எல்லைக் கோட்டினை அண்டியே அமைக்கப்படுவது வழக்கமாகிவிட்டது. இவரது துடுப்பாட்ட நோக்கு எத்தகையது என்பதை இது உணர்த்துவதாகும்

இன்று வாசிம் அக்ரம் தனது 23ஆவது வயதில் ஆக 32 டெஸ்ட் மாட்சுகளில் மட்டும் ஆடி 111 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவராக உள்ளார். இதில் ஒரே இனிங்சில் 5 விக்கெட்டுக்களை 8 முறை பெற்றிருக்கிறார். ஒரே மாட்சில் 10 விக்கெட்டுக்களை இரு முறை பெற்றிருக்கிறார்.

மேலும் துடுப்பெடுத்தாடுவதில் ஒருமுறை சென்சரியும், முறை அரைச் சென்சரிகளும் பெற்றுள்ளார். 100 விக்கெட்டுகளுக்கு மேல் பெற்ற பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களில் இவர் 7ஆவது நபராகவும் காணப்படுகிறார்.

இவரின் எதிர்காலம் எப்படி இருக்கும்? இம்ரானின்பின் பந்துவீச்சாளர்களில் இவரே முதன்மையானவராகத் திகழப் போகின்றார். இவர் மீது தொடர்ந்து பந்து வீச்சு சுமையாக அழுத்தப் படாதிருப்பது இவரை நீண்டகாலம் களத்தில் வைத்திருக்கும் என்பதும் கபில்தேவ் போந்தம் இம்ரான், ஹட்லி போன்றவர்களின் சாதனைகளை நோக்கி இவர் விரைவில் முன்னேறிச் செல்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர் இன்னும் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு களத்தில் நிற்கக் கூடிய திறமை வாய்ந்தவர் இதனையே கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இன்னும் இவர் புரிய வேண்டிய சாதனைகள் பல பந்துவீச்சாளருக்கு நீண்ட காலம் ஆடுதற்கு உடல் நிலை கைகொடுப்பது குறைவு இதனை யெல்லாம் மிஞ்சி வாசிம் அக்ரம் சாதனைகள் புரிய வேண்டும் என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் விருப்பமாகும்

நிர்மலன்

திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவின் அதிகாரி திரு சிதம்பரநாதன் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், வெளிநாடுகளில் எந்த ஒரு வேலையையும் செய்யும் நம் இளைஞர்கள் நமது நாட்டில் இப்படியான வேலைகளை செய்வதற்கு தராதரம்

பக் கல்வி அதிகாரி திரு. சுப்பிரமணியத்தையும் அவரைச் சார்ந்த சக அதிகாரிகளின அயராத முயற்சியினால், சகல பாடசாலைகளிலும் பல பயிற்சி நெறிகள் வெற்றி அளித்துள்ளது. இத் தொழில் நுட்பக் கல்வியினால் பல மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது என கூறினார்.

# நெடுந்தீவு ப. நோ. கூ.சங்க இயக்குனர் சபை ராஜினாமா

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக திரு நா. சங்கரப்பிள்ளை நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கூட்டுறவு ஆணையாளரினால் இடைக்காலத் தலைவராக நியமனம் பெற்றுள்ள இவரது இயக்குனர் சபை விரைவில் தெரிவு செய்யப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் தலைவரான திரு. த. அம்பலமும் அவரது இயக்குனர் சபையும் இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்தே புதிய தலைவர் நியமனம் மேற் கொள்ளப்பட்டது.

ப நோ கூ. சங்க ஊழியர்களுக்கும் இயக்குனர் சபைக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள் காரணமாக ஊழியர் சங்கம் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றினை மேற் கொண்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டு தினத்தில் சண்டை; மூன்று சகோதரிகள் மரணம்

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டு தினத்தின் போது பட்டாசு கொளுத்தியதால் காயமடைந்த இரு குழந்தைகள் கொழும்பு பெரியாஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இதேபோல மதுபோதையில் விபத்துக்களினாலும் கோஷ்டி சண்டைகளினாலும் சுமார் ஐம்பது பேர் வரையில் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரிகளும் தாக்குதல் சம்பவங்களால் மரணமாகியுள்ளனர்.

இருபத்தொரு பேர் வாகன விபத்துக்களாலும் தாக்குதல் காயங்களால் பதினேழுபேர் வரை படுகாயமடைந்துள்ளனர்.

## நீர் விநியோகம்
## தற்காலிக இடைநிறுத்தம்

வேம்படி வீதிச்சந்தியில், பிரதான நீர்-விநியோகக் குழாயில் சில திருத்த வேலைகள் செய்ய வேண்டி இருப்பதால் எதிர்வரும் 18-04-1990ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 6-00 மணி தொடக்கம் 19-04-1990 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 6-00 மணி வரை குருநகர், ஆஸ்பத்திரி, நவீனசந்தை ஆகிய பகுதிகளுக்கு நீர்-விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்படுமென்பதை அப்பகுதி மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

**வி. பி. பாலசிங்கம்**
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(பி/783)


# கிராமங்கள் முன்னேறுவதற்கு சனசமூக நிலையங்கள் அவசியம்

(பருத்தித்துறை)

''சனசமூக நிலையங்கள் கிராமிய கல்வி, கலை கலாசார, பொருளாதார. விளையாட்டுத்துறைகளின் வளர்ச்சிகளில் முக்கிய பங்கு கொடுக்க வேண்டும். சனசமூக நிலையங்கள் வெறும் வாசிகசாலைகளாக மட்டும் செயற்படுவதால் எதுவித பயனும் இல்லை.''

இவ்வாறு பருத்தித்துறை துமபளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய அதிபர் திரு. ஆ. வடிவேலு குறிப்பிட்டார்.

நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அதிபர் திரு. வடிவேலு குறிப்பிட்டதாவது:-

சனசமூக நிலையங்கள் கிராம மக்கள் மத்தியில் ஒற்றுமையைக் கட்டிக் காப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது முக்கியமாகும். சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் சுயநலமின்றி, சேவை மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும். அப்போதுதான் சனசமூக நிலையங்கள் சிறப்பாக இயங்க முடிவதுடன், சனசமூக நிலையங்களின் நோக்கமும் நிறைவேற முடியும். சனசமூக நிலையங்கள் சிறப்பாக இயங்குவதற்கு அரசாங்கமும், பல்வேறு சேவை நிறுவனங்களும் பல்வேறு வகையான உதவிகளை வழங்கி வருகின்றன. இவ் உதவிகளைப் பெற்று அவற்றினை முழுமையாகப் பயன்படுத்தி கிராமங்களில் கிராமிய எழுச்சியை ஏற்படுத்துவதற்குச் சனசமூக நிலையங்கள் முன்வர வேண்டும்.

கிராமிய சனசமூக நிலையம் சிறப்பாக இயங்குமாயின் அக்கிராமம் பல்வேறு துறைகளிலும் துரித அபிவிருத்தி மேம்பாட்டைக் காணமுடியும் என்றார்.

இதன் தலைவராக சி நடேசனும், செயலாளராக இ.அன்ரனியும், பொருளாளராக க. சின்னத்தம்பியும் தெரிவாகினர். (25)


## உதவி கோரல்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பெரிய விழான் கிராம சேவையாளர் பகுதியில் வசிக்கும் மாரீசன் கூடல், போயிட்டி வாழ் டற்தொழிலாளராகிய எமக்கு இது வரையில் எது வித நிவாரணமும் வழங்கப்படவில்லை. அண்மைக்காலத்தில் இடம் பெற்ற வன்செயல்களினால் மிக இன்னல்களுக்கு உள்ளான மக்கள் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். எனவே இதற்குரியவர்கள் இதற்கு ஆவன செய்யுமாறு மிகவும் தாழ்மையுடனும் பணிவன்புடனும் கேட்டுக் கொள்கின்றோம்.

**மாரீசன் கூடல் வாழ் மக்கள்.**

(R/ 187)



## அன்னை பூபதிக்கு
## எமது அஞ்சலி!



புதிய சகாப்தத்தின் விடிவெள்ளி
அன்னையின் வடிவில் இங்கு வந்து
ஆயிரமாயிரம் நெஞ்சங்களில்
விடுதலைக் கனலேற்றியது
ஏற்றிய அன்னை மறைந்தாள்
ஏற்றி வைத்த தீபம் ஒளியூட்டி
வழி காட்டி நிற்கிறது.

## அகிலா ஜுவல்லறி

72, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(R/193)



## விடியலைத் தேடிநின்ற வீரத்தாய்
## அன்னை பூபதிக்கு எங்கள் அஞ்சலி!



சுதேசி இன்றேல் சுபீட்சமில்லை

## அண்ணா தொழிலகம்

இணுவில்.

(B-785)



## திருக்கணித பஞ்சாங்கம்
## விற்பனையாகிக் கொண்டிருக்கிறது

- பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையிலான சகல விதமான பாடநூல்கள்
- ஸ்ரேஷனறிச் சாமான்கள்.
- இலங்கை - இந்திய சஞ்சிகைகள், நாவல்கள்.
- வாழ்த்து மடல்கள்.

- திருக்கணித பஞ்சாங்கம்
- கலண்டர்
- டயறி
- சோதிடமலர்

மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையிலும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

## திருக்கணிதம்

கச்சாய் வீதி.
சாவகச்சேரி.

(B-530)



## மக்கள் வங்கி

# அடகு நகைகள் மீளளித்தல்

**பின்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு அவற்றை மீளப் பெற்றுக்கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள் கீழ்க்கண்டவாறு மீளளிக்கப்படும்.**

யாழ். மாவட்டக் கிளைகள்: வழங்கும் திகதி: 1990—04—20 வெள்ளிக்கிழமை
வழங்கும் இடம்: யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம், (யாழ். கோட்டைக்கு அருகில் அமைந்துள்ளது)

1. யாழ். பிரதான வீதிக் கிளை: 1989-10-12 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு
   புங்குடுதீவுக் கிளை
2. யாழ். நவீன சந்தைக் கிளை: 1989-10-10 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு
3. சாவகச்சேரிக் கிளை: 1989-10-15 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு
   பளைக் கிளை:
4. யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை: 1989-10-15 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு
5. யாழ். கன்னாதிட்டிக் கிளை: 1989-10-12 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு
   சங்கானைக் கிளை:
6. சுன்னாகம் கிளை: 1989-10-11 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு
7. காங்கேசன்துறைக் கிளை: 1989-10-12 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு
8. வல்வெட்டித்துறைக் கிளை: 1989-10-18 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு
9. ஊர்காவற்றுறைக் கிளை: 1989-09-25 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு
10. பருத்தித்துறைக் கிளை: 1989-09-19 திகதி வரை பணம் செலுத்தியவர்களுக்கு
    நெல்லியடிக் கிளை:

கிளிநொச்சி மாவட்டம்: வழங்கும் இடம்: கிளிநொச்சி தபாற் காரியாலயம்

| | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|
| 1. பரந்தன் கிளை: (1989-09-28 வரை பணம்செலுத்தியவர்களுக்கு) | 1990-04-20 | வெள்ளி |
| கிளிநொச்சிக் கிளை: (1989-06-26 வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990-04-24 | செவ்வாய் |

முல்லைத்தீவு மாவட்டம்:

முல்லைத்தீவுக் கிளை: இக்கிளையில் அடகு வைத்த நகைகளை மீளப்பெறுவதற்காக 1989-09-21 திகதி வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் முல்லைத்தீவில் ஜெசி தியேட்டரில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் விசேட கரும பீடத்தினூடாக மீளளிக்கப்படுகிறது.

மாங்குளம் கிளை: இக்கிளையில் அடகு வைத்து மீளப் பெறுவதற்காக 1989-10-22 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமை முதல் மாங்குளம் மக்கள் வங்கியில் வைத்து மீளளிக்கப்படும்.

வவுனியா மாவட்டம்:

வவுனியாக் கிளை: இக் கிளைக்குரிய 1ஆம் கட்ட நகைகள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைத்து இம்மாதம் 18ஆம் திகதி முதல் மீளளிக்கப்படும்.

மன்னார் மாவட்டம்:

மன்னார்க் கிளை: இக்கிளையில் அடகு வைத்து மீளப் பெறுவதற்காக 1989-09-21 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 20ஆம் திகதி முதல் மன்னார் மக்கள் வங்கிக் கிளையில் வைத்து மீளளிக்கப்படும்.

முருங்கன் கிளை: இக்கிளையில் அடகு வைத்து மீளப் பெறுவதற்காக 1989—09—21 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 25ஆம் திகதி புதன்கிழமை முதல் மன்னார் மக்கள் வங்கிக் கிளையில் வைத்து மீளளிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

—பிராந்திய முகாமையாளர்,

மக்கள் வங்கி
பிராந்திய தலைமையகம், யாழ்ப்பாணம்.

(B782)

## சிந்தனைக்கு

பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே
பகைவனுக்கருள்வாய்

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 18 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

# "தும்பைவிட்டு வாலைப்பிடித்த கதை"

இந்திய உபகண்டத்தில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுமா?

இந்திய உபகண்டம் இந்தியா பாகிஸ்தான் என இரண்டாகப் பிரிந்து 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுதந்திரம் பெற்றதிலிருந்து காஷ்மீர் மாநிலம் பெரும் பிரச்சினையாகவே இருந்து வருகிறது.

காஷ்மீரில் ஒரு பகுதி ஆஸாத் காஷ்மீர் என்று அழைக்கப்பட்டு பாகிஸ்தானின் ஆதரவில் இருந்து வருகிறது. ஜம்மு காஷ்மீர் என்றழைக்கப்படும் மற்றப் பகுதி இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் பல தேர்தல்கள் நடைபெற்று இந்தியாவின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதென்று இந்தியா கூறுகிறது.

காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று 1948 ஆம் ஆண்டில் ஐ. நா. நிறைவேற்றிய தீர்மானத்தை இந்தியா நிறைவேற்ற வேண்டுமென்று பாகிஸ்தான் கூறுகிறது.

ஜம்மு காஷ்மீரில் தேர்தல்கள் நடந்து இந்தியாவின் ஒரு மாநிலமாக அது அங்கீகரிக்கபபட்டுவிட்டதால் சர்வஜன வாக்கெடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று இந்தியா கூறுகிறது.

சிம்லா உடன்பாட்டின்படி காஷ்மீர் பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டுமென்று இந்தியா கூறுகிறது.

ஜம்மு காஷ்மீருக்குள் பாகிஸ்தானியர் ஊடுருவி இந்தியாவுக்கு எதிரான கிளர்ச்சிகளையும் கலகத்தையும் தூண்டிவிடுவதாக பாகிஸ்தான்மீது இந்தியா குற்றம் சாட்டுகிறது.

இந்தியா தனது எல்லையில் படைகளைக் கொண்டுவந்து குவிப்பதாக பாகிஸ்தான் குற்றம்

# கழுதைகளின்பொருளாதார முக்கியத்துவம்

உலகில் காணப்படும் பல மிருகங்களில் குதிரை, கழுதை, கோவேறு கழுதை போன்றன 'இயக்குவைன்' இனத்தைச் சேர்ந்தன. இதில் கோவேறு கழுதையும், கழுதையும் பிடிவாதக்குணம், முரட்டுச் சுபாவம் போன்ற குணங்கள் உடையன. இம்மிருகங்களும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் பல கடின வேலைகளுக்கு உபயோகிக்கப்பட்டதை நாம் புத்தக வாயிலாக அறிந்துள்ளோம். இம்மிருகங்கள் குறைந்த உணவுடன் நீண்ட நாட்கள் தொடர்ச்சியாக வேலை செய்யும் இயல்புடையன. இதில் கழுதை பொதிகளைச் சுமப்பதற்கும், கால்நடையாக நீண்ட தூரங்களைக் கடப்பதற்கும் பாமர மக்களினால் பாவிக்கப்பட்டது. இதன் தாய் தந்தையர் 'நீயூக்கியன்' கழுதை இனத்தைச் சேர்ந்தவர்களாக நம்பப்படுகின்றது. இக்கழுதை இனம் கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முன் மொசப்பத்தேனியா, எகிப்து போன்ற தேசங்களில் இருந்து கொண்டு வரப்பட்டன. இவை அதிக உஷ்ணமுள்ள பிரதேசங்களிலும் இடைப்பட்ட சீதோஷ்ண வலையங்களிலும் உபயோகிக்கப்பட்டு வந்தது. பிடிவாதக் குணத்துக்குப் பெயர் பெற்ற இம்மிருகங்களை முற்காலத்தவர் இம்சைப்படுத்தி, அதை ஒரு பரிகாசப் பொருளாகவும் துன்பப்படுத்தியும் வேலை வாங்கினார்கள். ஆனால் ஒரு சில நாடுகளில் இவற்றை சிறு வயதிலிருந்தே பழக்கி எடுப்பதன்மூலம் வீட்டுப் பிராணியாகப் பாவித்ததுமுண்டு. இவை கரடுமுரடான பாதைகளில் மிகச் சுலபமாகத் தனது முதுகில் பொதிகளைச் சுமந்து செல்லும். கிறிஸ்து பிறந்த நாட்களில் இம்மிருகம் கிறிஸ்து நாதரினாலும் மற்றைய யூதர்களினாலும் பாவிக்கப்பட்டு, கிறிஸ்தவர்களின் பைபிள் புத்தகத்தில் முக்கிய இடத்தை எடுத்துள்ளது. மலைப்பிரதேசங்களில் வாழும் கிராமிய மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக பள்ளத்தாக்குகளில் உள்ள பட்டினச் சந்தைகளுக்கு இம்மிருகங்களை அழைத்துவந்து தாம் வாங்கிய பொருட்களை இக்கழுதையின் முதுகில் ஏற்றிச் செல்வதுடன், சிறு பெண்களையும், குழந்தைகளையும் இதன்மேல் அமர்த்தி தம் இருப்பிடம் திரும்புவர்.

இக்கழுதை இனங்கள் இலங்கைக்கு வந்த வெளிநாட்டுப் பிரமுகர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது இலங்கையின் ஒருசில பிரதேசங்களில் இவை காணப்படுகின்றன. மன்னாரில் தற்போது 1000க்கும் மேற்பட்ட கழுதைகள் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் சலவைத் தொழிலாளர்களினால் பாவிக்கப்பட்டு வந்ததாகக் கருதப்படுகின்றது. இவர்கள் தமது அழுக்குத் துணிகளை இரண்டு மூடைகளாகக் கட்டி இதன் முதுகில் ஏற்றி குளங்களுக்கும் தமது வீட்டுக்கும் எடுத்துச் செல்வதை மன்னார்வாசிகள் அறிந்திருக்கிறார்கள். ஆண்கழுதை பெண்கழுதையிலும் பார்க்கக் கூடிய பாரத்தைச் சுமக்கக் கூடியது.

கழுதையில் இரண்டு இனங்கள் உண்டு. ஒன்று சாம்பல் நிறம் சிறியவை மற்றது கூடிய வெள்ளை நிறங்கொண்ட பெரியவை இவ்வினங்கள் அதிகமாக இந்தியாவிலும் இலங்கையிலும் கானப்படுகின்றன. இதில் சிறியது கூடிய மண் நிறத்தைக் கொண்டதாகவும் வெண்ணிற வரிகளைக் கால்களிலும் கழுத்திலும் கொண்டிருக்கும். பெரியது கூடிய வெள்ளை நிறங்கொண்டனவாக இருக்கும். வெளிநாடுகளில் குறிப்பாக எகிப்து டமஸ்கஸ் அராபியா போன்ற பிரதேசங்களில் கழுதைகள் அதிகமாககாணப்படுகின்றன. இதில் பிரான்ஸ் தேசத்து கழுதைகள் மிகப்பெரியன. இந்தியாவில் உள்ளவை மிகச் சிறியது இக்கழுதை இனங்கள் இரண்டரை தொடக்கம் மூன்று வருடங்களில் தொழில் செய்வதற்கு உகந்ததாகும். வயது வந்த ஆண் கழுதை ஒருவருடத்தில் 160 தரம் இனவிருத்திக்காகப் பாவிக்கப்படலாம். ஆனால் ஒரு நாளில் இருமுறை மாத்திரம் இனவிருத்திக்காக பாவித்தல் உகந்ததாகும், ஒரு பெண் கழுதையின் கர்ப்பகாலம் பதினொன்றரை தொடக்கம் பன்னிரண்டு மாதங்களாகும். பொதுவாக வேட்கை 2-7

இதன்பால் அதிக போஷாக்கு நிறைந்ததாகக் காணப்படுவதுடன் கடின உழைப்புகள் செய்பவர்களுக்கும் சிறந்த உணவாகக் கருதப்பட்டது. இதன் பாலில் கொழுப்பு 1.37 மும் புரொட்டீன் 1.85%மும். சீனிச்சத்து 6.19%மும், கனிப்பொருள் 0.47%மும் நீர் 90.12%மும் உள்ளது. இப்பால் கூடிய விரைவில் ஜீரணிக்கக் கூடியது. இந்தியா, இத்தாலி, ஸ்பெயின், தெற்கு பிரான்ஸ் போன்ற நாடுகளில் தாய்ப் பாலுக்கு ஈடாக இப்பாலைக் கருதுகிறார்கள்.

கழுதை மணித்தியாலத்துக்கு 3 தொடக்கம் 5 கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்கக் கூடியது. அத்துடன் 25 தொடக்கம் 32 கிலோ மீற்றர் தூரம் வரை பிரயாணம் செய்யும். இதன் ஆயுள் 16 அல்லது 17 வருடங்களாகும். இதன் கால்களில் உள்ள குளம்பில் குதிரையைப் போன்று லாடம் அடிப்பது சிறந்ததாகக்கருதப்படுகிறது. மன்னாரில் உள்ள கழுதைகள் தற்போது கவனிப்பாரற்று பட்டணத்திலும் அதை அண்டியுள்ள கிராமங்களிலும் வாழ்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இவற்றைநன்கு பயன்படுத்தினால் பலவித பிரயோசனங்களைப் பெறலாம். இதன் சலமும், சாணமும் தென்னந் தோட்டங்களுக்கு நல்ல பசளையாக கருதப்படுகிறது. அத்துடன் தென்னந் தோட்டங்களை அழிக்கும் கருவண்டுகளுக்கு இதன் மணம் எதிரியாக கருதப்படுவதனால் பலர் தமது தென்னந்தோட்டங்களில் இவற்றை கட்டி வளர்ப்பதைக் காணலாம்.

குறிப்பாகமன்னாரில் உள்ள சலவைத் தொழிலாளர்களும், காடுகளில் விறகு வெட்டுபவர்களும் கழுதைகளை உபயோகிப்பார்களாயின் தமது வேலைப் பழுவைக் குறைப்பதுடன் கட்டாக் காலிகளாகத் திரியும் இம் மிருகங்களைப் பயனுள்ளவைகளாகவும் ஆக்க முடியும்.

## பூபதி நினைவாக விளையாட்டுப் போட்டி

(வண்ணார்பண்ணை)

வண்ணார்பண்ணை மேற்கு பகுதியில் கைறோஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் எஸ். பாலசுந்தரம் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட போட்டியில் கைறோஸ் விளையாட்டுக் கழகம் முதலாமிடத்தையும்முருகமூர்த்தி விளையாட்டுக் கழகம் வள்ளுவன் விளையாட்டுக்கழகங்கள் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டது. (44)

## கோமாரித் தடை ஊசி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கில் ஐம்பதுக்கு மேற்பட்ட கால் நடைகளுக்கு கடந்த வியாழக் கிழமை காலை கோமாரி நோய்த் தடைமருந்து (ஊசி) யாழ். கால் நடை வைத்திய அதிகாரிகளினால் ஏற்றப் பட்டது. (24)

## பெண்ணுக்கு ரூ.1500 அபராதம்

(கொழும்பு)

தெஹியோவிட்ட பகுதியில் உள்ள பெண் ஒருவர் குளிரூட்டப்பட்ட சோடாப்போத்தலை அதிக விலைக்கு விற்ற குற்றத்திற்காக அவிசாவளை நீதிவான் ஆயிரத்து ஐ நூறு ரூபா அபராதம் விதித்தார்.

## 28ஆவது ஆண்டு விழா

(நெடுந்தீவு)

நயினாதீவு மணிபல்லவ கலா மன்றம் தனது 28ஆவது ஆண்டு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாட உள்ளது.

இதிற்பிரதான அம்சமாக நாவலர் பெருமானின் உருவச் சிலையை நாகபூஷணி அம்மன் ஆலய முன் வீதியிலும், தெய்வப்புலவர் திருவள்ளுவரின் உருவச்சிலையை மகா வித்தியாலய வீதிச் சந்தியிலும் மகாகவி பாரதியாரின் உருவச்சிலையைத் தெற்குத் துறைமுக அருகாமையிலும் திரை நீக்கம் செய்து வைக்க ஏற்பாடாகியுள்ளது.

விழாவில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், அறிஞர்களும், கவிஞர்களும் கலந்து சொற் பொழிவுகளையும், கருத்தரங்குகளையும் நடாத்தவுள்ளனர். கவியரங்கமும், நாடகங் ளும் இடம் பெறவுள்ளன.

புங்குடுதீவு பகுதிகளில்

## மின் விநியோகத்தை சீர் குலைக்கும் வேலைகள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவின் பல பகுதிகளில் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. சட்ட விரோத மின் சாரம்இங்கு அதிகளவில் பெறப்படுவதே இதற்கு காரணமாகும்.

அத்துடன் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவோர் கொண்டு சில விஷமத்தனமான வேலைகளில் ஈடுபடுகின்றனர்.

மின் கம்பிகளில் சைக்கில் செயின் போடுதல், மின் மாற்றிகளில் கோளாறுகளை ஏற்படுத்தல், வீடுகளுக்கான மின் தொடர்புகளை துண்டித்தல் போன்ற நாச வேலைகளில்

## தபால் அமைச்சருக்கு வேண்டுகோள்

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பகுதியில் பல வாரங்களாகப் பழுதடைந்த நிலையிலுள்ள தொலைபேசித் தொடர்பினைச் சீர்செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு தபால்தொலைத் தொடர்புகள் அமைச்சரை ஏறாவூர் முஸ்லிம் புனர்வாழ்வு சபை கேட்டுள்ளது.

கடந்த பல வாரங்களாக ஏறாவூர் பகுதியில் தொலைபேசித் தொடர்புகள் இயங்கவில்லை. இதனால் இப்பகுதியில் உள்ள அரசாங்கக் காரியாலயங்கள், தனியார்துறை நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மாத்திரமன்றி பொது மக்களும் அவசரத் தொடர்புகளுக்குப் பெரிதும் கஷ்டமுறுகின்றனர்.

கொண்டுவந்து குவிப்பதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டுகிறது.

எல்லைகளில் படைகளைக் குவிப்பதாக இருதரப்பும் பரஸ்பரம் குற்றம் சாட்டுகின்றன. இன்றுள்ள நிலையில் எந்தச் சமயத்திலும் இருநாடுகளுக்கிடையிலும் போர் மூளலாம் என்ற ஆபத்து இருக்கிறது.

யார் போரைத் தொடங்கினார்கள் என்று பின்னர் சர்ச்சைப்படுவதில் அர்த்தமில்லை. இதற்கு முன்னரும் இரு நாடுகளும் இதே பிரச்சினையில் இரு தடவைகள் யுத்தம் புரிந்திருக்கின்றன.

யுத்தம் மூண்டால் யார் வெற்றி பெறுவார்கள் என்று கணிப்பிடுவதில் பயனில்லை.

யுத்தத்தினால் இருநாடுகளுமே வெகுவாகப் பாதிக்கப்படும்; இதுமட்டுமல்ல இலங்கை போன்ற அயல் நாடுகளுக்கும் யுத்தத்தினால் பாதிப்பேற்படுமென்பது உண்மை.

இரு நாடுகளுக்கும் ஆயுதம் மற்றும் உதவிகளை வழங்கிவரும் வல்லரசுகளான அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இப்பொழுது இந்தியாவும் பாகிஸ்தானும் மோதிக் கொள்ளாமல் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சமரச முயற்சியில் இறங்கியுள்ளனவாம்.

''பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்'' என்பதுபோல் வல்லரசுகளின் விளையாட்டு.

இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் உள்நாட்டுப் பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசை திருப்புவதற்கு இரு நாடுகளுக்கும் இப்போது ஒரு யுத்தம் தேவைப்படுகிறதென்பதும் உண்மையே!

காஷ்மீர் பிரச்சினையை இரு நாடுகளும் தங்கள் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடுகின்றன. காஷ்மீர் மக்களை மறந்துவிட்டன.

மக்களின் ஆதரவில்லாமல் எந்த யுத்தமும் உண்மையான வெற்றியை ஈட்டமுடியாது.

காஷ்மீர் மக்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்வதற்கு இந்தியாவும் பாகிஸ்தானும் விட்டுவிடுவதே பிரச்சினை தீர்வதற்குள்ள ஒரேயொருவழி; அதுவே நல்ல வழியுமாகும்.

---

மாக மின்சாரம் பெறுவோர் போட்டா போட்டிபோட்டுக்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன சேமிப்புக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம் மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.(24)

---

போன்ற நாச வேலைகளில் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

இப் பகுதியில் அடிக்கடி மின் தடை ஏற்பட்டு அனேக மின் பாவனையாளர்கள் பெரும் தொல்லைகளை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இது குறித்துசம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவைகள் புகார்கள் தெரிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றன. (22)

---

பொதுவாக வேட்கை 2-7 நாட்கள் நீடிக்கும் ஆனால் 3ம் நாளில் சினைப்படுவது சிறந்ததாகக் கருதப்படுகிறது 6 தொடக்கம் 12 மாதங்கள் பாலூட்டும் காலமாகும். ஆறு மாதங்களின் பின் குட்டியை தாயிலிருந்து பிரிக்கலாம். அதிகமாக ஒரு முறையில் ஒரு குட்டியை மாத்திரம் ஈனும்.

முற்காலத்துக் கிரேக்க அராபிய வாசிகள் எப்படி ஒட்டகப் பாலை அருந்தினார்களோ அதே போல ஒரு சிலர் கழுதைப்பாலையும் பருகினர்.

---

## விசேட பொதுச் சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்க விசேட பொதுச் சபைக்கூட்டம்எதிர் வரும்சனிக்கிழமை பி.ப 3மணியாளவில் ஹொட்டல் சுபாஸில் நடைபெறவுள்ளது. உணவு, மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி த. மகாதேவன் இக்கூட்டத்தில் உரையாற்றுவார்.

---

## கடற்படை வீரர் சடலமாக மீட்பு

(திருகோணமலை)

மலசல கூடத்திலிருந்து வெட்டுக் காயங்களுடன் கடற்படை வீரர் ஒருவர் மீட்கப்பட்ட சம்பவம் திருகோணமலையில் இடம் பெற்றுள்ளது.

இவரது மரணம் தொடர்பாக திருகோணமலை பதில் நீதிவான் திரு. கே. பாலசிங்கம் விசாரணை நடாத்தி தீர்ப்பு வழங்குவதை ஒத்தி வைத்தார்.

---

எனவே தயவுசெய்து மேற்படி தொலைபேசித் தொடர்புகளைச் சீர்செய்வதற்கு அவசர நடவடிக்கை எடுக்குமாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (37)

---

## ஆண்டு விழா

(மட்டக்களப்பு)

கோட்டைக் கல்லாறு இந்து இளைஞர் மன்றத்தின் ஓராண்டு விழா அண்மையில் தலைவர் திரு எஸ்.சாதசிவம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் திரு.கா. நடராசா களுவாஞ்சிக்குடி உதவி அரச அதிபர் திருஎம்.எம். புவனேஸ்வரன் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து கொண்டனர்.

''படைப்பு''என்றசஞ்சிகையும் வெளியிடப் பட்டது. முதற்பிரதி ஆலய வண்ணக்கர் திரு. எம். கணபதிப் பிள்ளை பெற்றுக் கொண்டார்.

அன்றைய தினம் 28 சிறார்களுக்கு புத்தாண்டு வஸ்திரணம் செய்யப்பட்டது. (37)

---

# அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் புனரமைப்பு

ஆசிரியர்

ஈழநாதம்,

1990 ஏப்பிரல் 4ஆம் திகதி தங்கள் பத்திரிகையில் மேற்படி சங்கம் புனரமைப்புத் தொடர்பாக மக்கள் மடல் பகுதியில் திரு. எஸ். சண்முகலிங்கம் எழுப்பிய கேள்விகளுக்குப் பொதுச் செயலாளர் என்ற முறையில் அவருக்காக மாத்திரமல்ல எமது ஏனைய மாவட்ட அங்கத்தவர்களுக்கும்தெளிவுபடுத்தவேண்டியது எனது கடமையாகும்,

யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உண்மை நிலை சகல அங்கத்தவர்களுக்கும் தெரியும். தாய்ச்சங்கச் செயற்குழு உறுபபினரும் தற்போது யாழ் கச்சேரிப் புள்ளி விபரக் கிளையில் கடமையாற்றுபவருமான திரு. வே. செல்வநாயகம் அவர்களினால் அழைப்பாளர் என்ற முறையில் யாழ் கிளைச் சங்கத்தின்புனரமைப்புக் கூட்டம் தொடர்பான அறிவித்தல் றோனியோ செய்யப்பட்டுக் கூட்டம் நடைபெறும் திகதியும் (2. 3. 90) நேரமும் இடமும் குறிப்பிட்டுச் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

கூட்டத்தில் சகல அங்கத்தவர்களும் பங்கு பற்றும் வகையில் அன்று பிற்பகல் 2/45 மணியிலிருந்து கடமை லீவு யாழ் அரசாங்க அதிபரினாலும் கல்விப் பணிப்பாளரினாலும் ஏனைய திணைக்களத் தலைவர்களினாலும் வழங்கப்பட்டுள்ளதை அவ்வறிவித்தலில் குறிப்பிட்டிருந்ததையும் யாழ்ப்பாணத்திலுள்ள சகல அங்கத்தவர்களும் அறிவர். கல்வித்

### மக்கள் மடல்

திணைக்கள ஊழியர்கள் மாத்திரமல்ல யாழ் செயலகத்தில் கடமைபுரியும் ஊழியர்களும் பொலிஸ் அலுவலக ஊழியர்களும் அன்றைய கூட்டத்தில் கலந்து கொண்டதையும் அவர்கள் செயற்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதையும் ஏன் இவர் அறியவில்லையா?

ஆண்டுக்கொரு முறைதான் கிளைச் சங்கங்களுக்கானசெயற்குழு தெரிவுசெய்யப்படுவது வழக்கம். அங்கத்தவர்வேண்டுகோள் விடுக்கும் பொழுதெல்லாம் செயற்குழுவைத் தெரிவு செய்வது சாத்தியமாகுமா என்பதை இவர் சற்றே சிந்திக்க வேண்டும்.

இன்று வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் கிளைச் சங்கங்கள் புனரமைக்கப்பட்டு மே21ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் தாய்ச் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்குக் கிளைச் சங்கங்கள் தயாராகிக் கொண்டிருக்கும்இந்நேரத்தில் குட்டையைக் குழப்பும் இவர் எமது சங்க அங்கத்தவரா என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

உண்மையில் எமது சங்க அங்கத்தவரானால் உண்மையை ஏன் தீர விசாரித்து அறியவில்லை என்பது விளங்கவில்லை. இருந்த போதிலும் மே 21இல் நடைபெறவிருக்கும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் விவாதத்துக்குரிய பிரேரணையாக இதைக் கொண்டு வந்தால் பொதுச் சபையில் விவாதிக்கலாம். மேலும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில்ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெறும். தேர்தலில் எந்தப் பதவிக்கும் போட்டியிட சகல அங்கத்தவர்களுக்கும் உரிமை உண்டு.

செ. பரராஜசிங்கம்
பொதுச் செயலாளர்
அரசாங்க எழுது வினைஞர் சங்கம்.
யாழ்ப்பாணம்.

---

# பாடசாலைகள் அபிவிருத்திக்கு மாகாண கல்வி நிதியம்

## கல்வியமைச்சர் லலித் நடவடிக்கை

பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்க்கும் போது பணம் அறவிடப்படுவதை தடுப்பதற்கு புதிய கல்வி உயர் கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக மாகாண கல்வி நிதியம் என்ற ஒரு அமைப்பை உருவாக்க அமைச்சர் திட்டமிட்டுள்ளார்.

விரும்பிய எவரும் இந்த நிதியத்துக்கு அன்பளிப்பாக பணம் செலுத்த முடியும். இதேபோல பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் பெற்றோர்களும் இந்த நிதியத்துக்கு விரும்பினால் நன்கொடைகளை வழங்கலாம் எனவும் அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

வழங்கப்படும் இந்த நிதி அவர்கள் விரும்பும் பாடசாலைக்கோ அல்லது பின் தங்கிய பாடசாலைகளின் அபிவிருத்திக்கோ செலவிடப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பாடசாலைகளின் அபிவிருத்திக்காக சில பாடசாலைகளில் பெற்றோரிடமிருந்து கண்டபடி நிதி வழங்கப் படுவதாகவும் அமைச்சருக்குப் புகார்கள் வந்துள்ளன.

ஈழநாதம்

## மின்னல் தாக்கி மரணம்

(அக்கரைப்பற்று)

புதுவருடப் பிறப்பன்று மின்னல் தாக்கிப் பொத்துவிலில் ஒருவர் பலியானார்.




# யாழ். இந்து அமோக வெற்றி!

# பிரபாகரனின் அபார பந்து வீச்சு

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். இந்துக்கல்லூரி சென்ஜோன்ஸ் கல்லூரியை இன்னிங்ஸ் வித்தியா சத்தாலும் 126 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியாழ்ப்பாண பாடசாலைகளில் தாங்கள் பலம் வாய்ந்த கிரிக்கட் அணியாகவும் சிறந்த துடுப்பாட்டக்காரர் அடங்கிய அணியாகவும், சிறந்த பந்து வீச்சாளர் அடங்கிய அணியாகவும் முன்னணியில் நிற்பதாக யாழ்ப்பாண கிரிக்கட் ரசிகர்களுக்கும், அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கும், காட்டி விட்டார்கள்.

ரி. பிரபாகரன் மிகவும் உற்சாகமாகவும், வேகமாகவும் நிதானமாகவும் பந்து வீசி மொத்தம் 10 விக்கட்டுகளை 37 ஓட்டங்களை மாத்திரமே கொடுத்து கைப்பற்றினார். அத்துடன் என். கோபிராஜ் யாழ். இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியபோது 73 ஓட்டங்களை மிகவும் சிறந்த முறையில் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர் 3 சிக்சர்களும் 12 பவுண்ரிகளும் அடித்துள்ளார். கபிலன் இவருக்கு துணையாக நின்று 43 ஓட்டங்களை நிதானமாக விளையாடி பெற்றார் இவர் 2சிக்சர்களும் 8 பவுண்ரிகளும் அடித்தார். ''முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்துக் கல்லூரி மின்னல் வேகத்தில் 215 நிமிடங்களில் 286 ஓட்டங்களைப் பெற்றனர் என். கோபிராஜ் 73, ராஜசேகரர் 46, கபிலன் 43, ஆர். வரதன் 40, நரேந்திரன் 24, வரதன் 20, ஜெயராஜ் 17, ஆர், வரதன் 40, சென்ஜோன்ஸ் கல்லூரிசார்பில் பந்து வீசிய பிரசாந்தன் 4 விக்கட்டுகளையும், சதீசன் 3 விக்கட்டுகளையும், அஜித்லக்ஸ்மன் 2 விக்கட்டுகளையும், கைப்பற்றினர்.

சென் ஜோன்ஸ் கல்லூரி முதலாவது இன்னிங்சில் மொத்தம் 75 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுள்ளது. யாழ் இந்து கல்லூரியின் சிறப்பான பந்து வீச்சுக்கு விக்கட்டுகள் ஒன்றுக்கு பின்னால் ஒன்று விழுந்த வண்ணமே இருந்தன.

எஸ். நரேந்திரன் 4 விக்கட்டுகளையும் ரி. பிரபாகரன் விக்கட்டுகளையும் எஸ். வரதன் 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

திரும்பவும் சென்.ஜோன்ஸ் கல்லூரியைத் துடுப்பாடும்படி பணிக்கப்பட்டார்கள். ரி.பிரபாகரனின் சிறப்பான பந்து வீச்சுக்கு தாக்கம் பிடிக்க இயலாமல் விக்கட்டுக்கள் விழுந்த வண்ணமே இருந்தன ரி. பிரபாகரன் 6 விக்கட்டுகளை கைப்பற்றினார். எஸ். நரேந்திரன் 4 விக்கட்டுக்களை கைப்பற்றினார்.

சென்ஜோன்ஸ் கல்லூரி 2-வது இன்ஸிங்சில் மொத்தம் 85 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுள்ளது.

இப்போட்டிக்கு திரு. செல்வராசாவும், திரு. சிறிதரனும் மத்தியஸ்தம் மிகவும் சிறந்த முறையில் வகித்தார்கள்.

## தேர்தல் இடாப்புக்களில் புதிய வாக்காளர் பதிவு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வாக்காளர்களின் தேர்தல் இடாப்புக்களில் வாக்காளர்களின் பெயர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் நாட்டில் நீண்டகாலமாக இல்லாதவர்களின் பெயர்களை நீக்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் சகல கிராமசேவையாளர்களுக்கும் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தத்தமது பெயர்களை வாக்காளர் இடாப்பில் பதிவதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து திணைக்களத்தில் ஒப்படைக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (43)

## மீண்டும் யாழ். மாவட்டத்தில் கோமாரி நோய்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீண்டும் கால்நடைகளுக்குக் கோமாரி நோய் ஏற்படுவதாக கால்நடைப் பகுதி புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவருகிறது.

இதேபோல பொதுமக்களும் இறைச்சியை வாங்கும்போது அவதானமாக இருக்கவேண்டுமென்றும் சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

## சர்வோதய உதவியில் புனர் நிர்மாணம்

(சம்மாந்துறை)

16.11.89 இல் தேசிய இராணுவத்திற்கும், பாதுகாப்புப் படைக்கும் ஏற்பட்ட மோதலில் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்ட சவளக்கடைக் கிராமம், தற்பொழுது கல்முனை மாவட்ட, சர்வோதய மாவட்ட இணைப்பாளர் திரு. க. கனகரெத்தினத்தின் அயராத முயற்சியினால், மறுசீரமைக்கப்பட்டு, புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

இக் கிராம மக்களின் இருப்பிட வசதி, உணவு. உடை போன்ற உதவிகள் கல்முனை சர்வோதய மாவட்டக் காரியாலயம் மூலம் வழங்கப்பட்டு வருவதனால் இக்கிராமம் சர்வோதயக் கிராமமாக மாற்றமடைந்து வருகின்றது. (57)

## கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு அலவன்ஸ்

(மட்டக்களப்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள கல்வித்திணைக்கள ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான ஐம்பதுவீத ஊக்குவிப்பு அலவன்ஸ் அடுத்த மாதச் சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் திரு. ஏ. ஜே. சற்குணராஜா இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

1989 ஜூலை மாதம் முதல் 1989 டிசெம்பர் மாதம் வரையிலான ஆறுமாத காலத்துக்கு இந்த அலவன்ஸ் வழங்கப்பட வேண்டும்.

முதற்கட்டமாக ஜூலை ஆகஸ்ட் மாத அலவன்ஸ் ஒன்றாக சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளது.

அடுத்தவை மாதாந்த அடிப்படையில் வழங்கப்படும் எனவும் கல்விப்பகுதி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (37)

## அம்பாறை மாவட்டத்திலும் அன்னைபூபதி எழுச்சிவிழா

(அம்பாறை)

அன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டு நினைவையொட்டி அம்பாறை மாவட்டத்திலும், எழுச்சி விழா இடம் பெற இருக்கிறது.

19ம் திகதி அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களில் இருந்தும் மக்கள் பேரணிகள் வந்து காரைதீவு விபுலானந்த மத்திய மகா வித்தியாலய மைதான நிலையத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

அப்பாறை மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் கஸ்ரோ தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல சிற்றூர் கிளை உறுப்பினர்கள் உரையாற்றுவர்.

அன்னை பூபதி நினைவாக கவியரங்கு பேச்சுக்களும் இங்கு நடைபெறும் இக் கூட்ட முடிவில் அம்பாறை மாவட்டத்தில் பல பாகங்களுக்கும் காரைதீவில் இருந்து பஸ் சேவைகள் நடைபெறும் என்றும் திரு, கஸ்ரோ தெரிவித்தார். (48)

## சம்மாந்துறையில் தடை

சம்மாந்துறை பகுதியில் கடந்த காலங்களிலிருந்து வந்த சட்டவிரோத மின் பாவனை, விடுதலைப்புலிகளின் சம்மாந்துறைப் பொறுப்பாளர் திரு. நிதியின் நடவடிக்கையால் முற்றாக அவை தடைசெய்யப்பட்டுள்ளது.

இதேபோல சட்டவிரோதமாக வீடுகளில் மதுபானம் விற்கப்பட்டதும் நிறுத்தப்பட்டுள்ளது. (57)

## கைதடியில் உண்ணாவிரதம்

(சாவகச்சேரி)

தமிழீழ தாயக மண் மீட்பிற்காக ஒரு மாதகாலம் உண்ணா விரதமிருந்து உயிர் நீத்த தியாகத்தின் அன்னை பூபதியின் நினைவாக நாளை கைதடிச் சந்தியில் அப்பகுதி பொதுமக்கள் உண்ணாவிரதமிருந்து தமது அஞ்சலியை செலுத்தினர்.

தமிழீழ விடுதலை புலிகள் கைதடி அலுவலகத்திற்கு அருகாமையில் இப்பெரிய அளவிலான உண்ணாவிரதம் இடம் பெற்றது. பொது மக்கள் தாமாகவே வந்து இந்த உண்ணா விரதத்தில் கலந்து கொண்டனர். (35)

## விதவைகளுக்கு சுயதொழில்

(மட்டக்களப்பு)

கோட்டைக்கல்லாறு இந்து இளைஞர் மன்றத்தின் கீழ் ஒன்பது விதவைகளுக்கு மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் சுயதொழில் வாய்ப்பு அளித்துள்ளது.

இருவிதவைகளுக்கு தையல் மெஷின் வழங்கப்பட்டது.

மிகுதி ஏழுபேருக்கு தலா ஆறாயிரம் ரூபா சுயதொழிலுக்காகவழங்கப்பட்டுள்ளது. (37)

## மின்னொளியில் கரப்பந்தாட்டம்.

(விசேட நிருபர்)

வீரமரணமடைந்த குருநகர் ...

அன்னை பூபதியின் தியாக மரண இரண்டாம் ஆண்டு

## மரதன் சைக்கிள் ஓட்டப்போட்டி

தமிழ் புதுவருட பிறப்பை

## கருத்தரங்கு

காக்காச்சிவட்டை, கோவில் போரதீவு குடும்பத்திட்ட கிராமிய செயற்குழு தொண்டர்களுக்கான பயிற்சி 3 நாள் கருத்தரங்கு அண்மையில்

கோமாரி நோய் ஏற்படுவதாக கால்நடைப் பகுதி புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவருகிறது.

தற்போதைய அதிக வெப்பம் காரணமாகப் பல இடங்களில் இந்த நோயினால் பல ஆடு, மாடுகள் இறந்துள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

சிலர் நோய்கண்ட ஆடு, மாடுகளை இறைச்சிக்காக விற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கால்நடை வளர்ப்புக் கூட்டுறவுச்சங்கங்கள், இதுதொடர்பாகக் கால்நடை வைத்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**ஆசனம்....**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கட்டுக்களும் பெற்றுக் கொள்ளலாம்.

சில நாட்களுக்கு முன்னர் ரயில்வே பகுதியைச் சேர்ந்த உயர் அதிகாரிஒருவர் தன்னை யார் என அறிமுகம் செய்தும் அவருக்கும் ஆசனப் பதிவு இல்லை என்றே கூறப்பட்டது.

ஆனால் அந்த அதிகாரி, அங்குள்ள தரகர் மூலம் நூறு ரூபாவுக்கு உறங்கலிருக்கைக்குப் பதிவு ரிக்கற்றைப் பெற்றுக் கொண்டாராம்.

இதேபோல மட்டக்களப்பு ரயில்களிலும் இந்த தரகர் வேலைகள் ஆரம்பமாகியுள்ளதாக மட்டக்களப்புப் பிரயாணிகள் தெரிவிக்கின்றனர்.

---

**நாட்டில்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி திணைக்களமும் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் இங்கு கூறினார்.

கொழும்பு மாநகரில் புதிய நேர அட்டவணைப்படி கடைகளை திறப்பதால் போக்குவரத்து நெருக்கடி குறைந்துள்ளதாகவும் அமைச்சரிடம் இங்கு தெரிவிக்கப்பட்டது.

---

... யினர் தெரிவிக்கின்றனர்.

---

# நேபாளப் பிரதமரின் காரைத் தாக்கினர்

(காட்மாண்டு)

சென்ற ஞாயிற்றுக்கிழமை எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காகச் சென்று கொண்டிருந்த நேபாளப் பிரதமர் லோகேந்திரா பகதூர் சந்தின் காருக்கு, ''கொலையாளிகளைத் தூக்கிலிடுங்கள்'' என்ற சுலோகங்களை இட்டுச் சென்றவர்கள் கற்களால் தாக்கினர்.

---

**சுன்னாகத்தில்....**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணிவரை ஏற்றுக்கொள்வதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சுன்னாகம் தபால் நிலையம் புகையிரதநிலையத்துக்குப்பக்கத்திலிருப்பதால் பொது மக்களின் நலன்கருதி மேற்படி விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகச் சுன்னாகம் பிரதம தபாலதிபர் இ. திருநாவுக்கரசு ஈழநாதத்துக்குத் தெரிவித்தார்.

---

**இயந்திரம்...**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரைவாகவும் முடிப்பதற்கு ஏற்பாடாக இருந்தது ஆனால் தற்போது இவ்வியந்திரம் பழுதடைந்ததை தொடர்ந்து ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என அப்பிரிவு ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். (லோ)

---

**தேனிசைச்..**

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

ந்து எதிர்வரும் 24ஆம் திகதி புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் இவரதுக்கச்சேரிஇடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து தமிழ்ப் பகுதியிலுள்ள ஏனைய மாவட்டங்கள்தோறும் தலா இரண்டு கச்சேரி வீதம் நடைபெற விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி கலை, கலாசாரப்பேரவையினர்ஏற்பாடுகளைச்செய்துள்ளனர்.

---

... வோதயக் கிராமமாக மாற்றமடைந்து வருகின்றது. (57)

---

**ஆண்டுவிழா**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ளது. மாலையில் பரிசளிப்பு விழாவும் அதனைத் தொடர்ந்து அமுதகானமும் இடம்பெறும் என விளையாட்டு கழகத்தினர் தெரிவிக்கின்றனர். (லோ)

---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**தமிழர் முஸ்லிம் . . .**

இக்கூட்டத்தில்பேசிய தலைமைச் செயற்குழு உறுப்பினர் கவிஞர் காசி ஆனந்தன் பேசுகையில் உயிர் நீத்தவர்கள் மக்களின் மனத்தில் வைத்துப் பூசிக்கப்பட வேண்டியவர்கள் எனவும், மக்கள்தொடர்ந்தும் போராட்டத்தில் பங்குபற்ற வேண்டும் எனவும் கோரியதோடு போராட்டம் முற்றுப் பெறவில்லை எனவும் தற்போது அரைவாசிக் கட்டத்தையே போராட்டம் கடந்துள்ளதுஎனவும்தெரிவித்தார்

திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ரூபன் பேசுகையில், திருமலை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் நீண்ட காலம் பிரச்சினையின்றி வாழ்ந்து வருவதாகவும், இந்நட்பு நிலையில் ஏதும் பங்கம் ஏற்படாதவாறு, தொடர்ந்து நட்பு நிலை பேணப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இக்கூட்ட முடிவில் திருமலை மாவட்டத்தில் உள்ள பள்ளிவாசல்களின் தலைவர்கள், தங்களின் பிரச்சினைகள் தொடர்பான மகஜர் ஒன்றை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசாவிடம் ஒப்படைத்தனர்.

---

# கரப்பந்தாட்டம்.

(விசேட நிருபர்)

வீரமரணமடைந்த குருநகர் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட (ஓவர்கேம்) போட்டிகள் மின்னொளியில் நடாத்தப்பட இருக்கின்றன.

அன்னை பூபதியின் தியாக மரண இரண்டாம் ஆண்டு நிறைவு தினமான இம்மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் போட்டிகள் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் குருநகர் சனசமூக நிலைய கரப்பந்தாட்ட மைதானத்தில் மின்னொளியில் நடைபெறுமெனத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. (21)

---

**கூட்டுத்தாபன....**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு திரும்பவுள்ளார்.

இம்மாதம் 21ஆம் திகதிஇத் தொழிற்சாலையில் நடைபெறும் ஊழியாகளின் புதுவருட வைபவத்திலும் அவர் கலந்து கொள்வார். (37)

---

**வடக்கிற்கு...,**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவ்வதிகாரி இது பற்றித் தெரிவிக்கையில், எமது வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் எல்லாமாக ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஊனமுற்றோர் இருக்கிறார்களென நாம் மதிப்பீடு செய்துள்ளோம் என்றும், இதுவரை தாம் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களும். உள்ளூர் சிறுகைத்தொழில் நிறுவனங்கள் மூலமுமே இவர்களுக்கு உதவிகள் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

---

**பதவி....**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் நிலை உத்தியோகத்தருக்கும் இது பொருந்தும் எனவும் அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (37)

---

**ஒப்பந்த...**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி )

நிரந்தர ஊழியருக்கு வழங்கப்படும் சலுகைகளை வழங்குதல், இலங்கை அரசாங்கத்தால் கூட்டப்பட்ட ரூபா 200/- சம்பள உயர்வு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஒப்பந்த ஊழியர் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர்.

---

# மரதன் சைக்கிள் ஓட்டப்போட்டி

தமிழ் புதுவருட பிறப்பை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒழுங்கு செய்யப்பட்ட மரதன் சயிக்கிள் ஓட்டப் போட்டி நான்கு நாட்களாக நடந்து கொண்டிருக்கின்றன.

அக்கரைப்பற்று, கோதாவில், திருக்கோயில் ஆகிய இடங்களிலிருந்தே போட்டிகள் நடைபெறுகின்றன.

---

காக்காச்சிவட்டை, கோவில் போரதீவு குடும்பத்திட்ட கிராமிய செயற்குழு தொண்டர்களுக்கான பயிற்சி 3 நாள் கருத்தரங்கு அண்மையில் கோவில் போரதீவு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

50 தொண்டர்கள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கு குடும்பதிட்ட செயற்திட்ட முகாமையாளர் திரு. எஸ். ஜீவநாதன் தலைமையில் நடைபெற்றது. (37)

---

# கருணாநிதியில் குற்றம் காண வாழப்பாடி தீவிரமுயற்சி

(எமது தமிழ்நாட்டுச் செய்தியாளர்)

ஈழப் பிரச்சினையில் தமிழக முதல் மந்திரி மு. கருணாநிதிமீது பிழை கண்டுபிடித்து அரசியல் இலாபம் தேடலாம் என தமிழ் நாட்டு இந்திரா காங்கிரஸ்காரர் நடவடிக்கைகள் எடுத்து வருவதாகத் தெரிகின்றது என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்

இந்திரா காங்கிரஸ் கட்சி அ. தி. மு. க. கட்சியின் தலைவி செல்வி ஜெயலலிதா நடமாட முடியாத நிலையில் இருப்பதாலும் அவரை அரசியலில் இருந்து ஒதுங்கும்படி டாக்டர்கள் வற்புறுத்துவதனாலும் இவ்வாறு பிழை கண்டுபிடித்து தமது நிலைமைகளைப் பலப்படுத்திக் கொள்ள இந்திரா காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஈடுபட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

ஈழத்தில் எமது தமிழ்ச் சகோதரர்களைக் கொன்று குவிக்கப் பயன்பட்ட இந்திய இராணுவத்தைத் தான் எவ்வாறு வரவேற்பதுஎன்பதனையும், தமிழக மீனவர்கள் இந்திய எல்லைக்கு அப்பால் மீன் பிடிக்கச் செல்லக்கூடாது என்பதையுமடிப்படையாக வைத்தே இந்திரா காங்கிரசார் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர்.

மோசடி வழக்கு, ஜெயலலிதாவின் துணை இல்லாமை என்பவற்றால் அல்லாடிப் போயிருக்கும் வாழப்பாடி இராமமூர்த்தியே இப்பிரச்சாரத்தில் தீவிரமாக இருப்பதாகத் தெரிகின்றது. எங்களினுரிமைகளை தங்கள் புலி நண்பர்களுக்குக் கருணாநிதி வழங்கிவிட்டார் என ராமமூர்த்தி குற்றம் சாட்டுகிறார்.

---

# பஸ்நிலையம் புனரமைப்பு

(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று பஸ்நிலைய புனரமைப்பு, விஸ்தரிப்பு வேலைகள்நடைபெறுகின்றன பஸ்நிலையத்தைப் புனரமைக்க இடவசதி போதாமையினால், விடுதலைப் புலிகள் உடன் நடவடிக்கை மேற்கொண்டதால் பக்கத்திலிருந்த கடைகள் அகற்றப்பட்டு பொதுமக்களின் ஒத்துழைப்புடன் புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

---

## அன்னை பூபதியின்

தியாக வேள்வியினை நினைவு கூருமுகமாக

**அடையாள உண்ணாவிரதமும்**

**நினைவஞ்சலிக் கூட்டமும்**

**இடம்: நல்லூர் தெற்கு கற்பக வினாயக ஆலய முன்னால்**

**காலம்: 18. 04. 1990 (புதன்)**

உண்ணாவிரத முடிவில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியைச் சேர்ந்த பிரமுகர்கள் உரையாற்றவிருக்கின்றார்கள்.

தமிழ் மக்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

நல்லூர் தெற்கு
இளைஞர்கள்

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்தில்லுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.